தமிழர் இசைக் கருவிகள்

மகர யாழ்

WITH COURAGE AND FAITH

(1945)

Jocket Printed at Commercial Printing & Publishing House, G. T., Madras.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்து இசைத்தமிழ் வெளியீடு 5

தமிழர் இசைக்கருவிகள்

ஐந்தாந்தொகுதி – இரண்டாம் பகுதி.

ஆக்கியோர்

புதுவை. ஸ்ரீ அரவிந்த ஆசிரமம்

திரு. P. கோதண்டராமன் அவர்கள், M. A. B. L.

அநுபந்தம்

கோவை ராவ்பகதூர்

திரு. C. M. இராமச்சந்திரஞ் செட்டியார் அவர்கள், B. A. B. L.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தாரால்

ஸ்ரீ முகுந்தன் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

உரிமை]

1945.

விலை ரூ. 1–4–0.

உள்ளுறை.

1. கடவுள் வாழ்த்தும் பல்கலைக் கழக வாழ்த்தும்

2. செட்டிநாட்டரசரின் நிழற்படம்

3. செட்டிநாட்டரசரின் உருவச் சிறப்பும் வாழ்த்தும்.

4. இசைக் கல்லூரியின் நிழற்படம்.

5. பதிப்புரை (மகாமகோபாத்தியாய பண்டிதமணி திரு. மு கதிரேசச் செட்டியாரவர்கள்) i–ii

6. முன்னுரை (நூலாசிரியர்) iii-viii

7. நான்முகம் (சுத்தானந்த பாரதியாரவர்கள்) ix-xiii

8. நூல் எழுதுதற்கு உதவியான கட்டுரை முதலியன xiv-xv

9 பொருளடக்கம். xvi–xvii

10. நூல் 1—66 பக்கம்

11. அநுபந்தம் (ராவ்பகதூர் திரு. C. M. இராமச்சந்திரஞ் செட்டியாரவர்களால் அளிக்கப்பெற்ற இசைக் கருவிப் படங்கள் 1—15

உ

மகாமகோபாத்தியாய பண்டிதமணி

திரு. மு. கதிரேசச் செட்டியாரவர்கள்

இயற்றியவை.

கடவுள் வாழ்த்து.

ஆசிரிய விருத்தம்.

பூவார் மணம்போல் உலகமெலாம்
பொருந்தி யியக்கும் பெரும்பொருளே
புனிதம் நிறைந்த உணர்வுடையோர்
புகழிற் கிடக்கும் புண்ணியனே
நாவார் கலைகள் துணிபொருளா
நவில்நா யகனே மெய்யுணர்வின்
நலமார் வடிவே யகவிருளை
நலிந்து விளங்கி நல்லன்பர்
தூவார் உளத்திற் சுடர்விளக்கே
துகளற் றொடுங்கித் தமைமறந்து
துய்ப்பார்க் கினிய செழுந்தேனே
தோன்றாத் துணையே அறுவனெனும்
மேவார் தமைச்செற் றுளந்தெளிந்தோர்
வினைமா சறுக்கும் மெய்ப்பொருளே
விரும்பிப் பணியும் எம்மையருள்
வெள்ளத் திளைத்துக் காத்தருளே.

அண்ணாமலைப் பல்கலைக்கழக வாழ்த்து

கட்டளைக் கலித்துறை.

கண்ணார் மணியிற் புரப்போ னெனும்பொருட் கார்பொழிந்த
தண்ணார் நிதிநீர்ச் செழிப்பிற் கலைப்பயிர் தான்வளர்க்கும்
அண்ணா மலைப்பல் கலைக்கழ கப்பே ரணிநிலையம்
விண்ணார் புகழொடு நாணாளு மோங்கி விளங்குகவே.

அண்ணாமலைப் பல்கலைக்கழகம் நிறுவிய
செட்டி நாட்டரசர்
உயர்திரு. டாக்டர் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார்

மகாமகோபாத்தியாய பண்டிதமணி

திரு. மு. கதிரேசச் செட்டியார் அவர்கள் கூறியவை.

உயர்திரு. செட்டிநாட்டு அரசர் அவர்களின் உருவச் சிறப்பு.

ஊக்கம் உறுதி உணர்ச்சி யருஞ்செயலின்
ஆக்கம் அறம்புகழ்ன் பாண்மைமுதல் - நீக்கமறக்
காண்டற் கமைந்த கவினுரு அண்ணாமலைமன்
ஆண்டகையின் நல்லுருவ மாம்.

வாழ்த்து.

சீர்மலி கொடையால் அறிவினால் ஆற்றுஞ்
 செயற்கருஞ் செயலினால் உலகிற்
பேர்மலி புகழாற் பல்கலைக் கழகம
 நிறுவிய பெருமையாற் சிறந்தோன்
ஏர்மலி தருநல் இசைத்தமிழ் வளர்க்கும்
 ஏந்தல்நம் செட்டிநாட் டரசாம்
நார்மலி யுளத்தண் ணாமலை வள்ளல்
 நலமுற நீடுவா ழியவே.



இசைக்கல்லூரி (அண்ணமலைப் பல்கலைக்கழகம்)

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துத் தமிழ் ஆராய்ச்சிப் பகுதித் தலைவர்,

மகாமகோபாத்தியாய பண்டிதமணி

திரு. மு. கதிரேசச்செட்டியார் அவர்கள் எழுதிய

ப தி ப் பு ரை.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்து இசைத் தமிழ் வெளியீடுகளுள் இஃது ஐந்தாந்தொகுதியின் இரண்டாம் பகுதியாகும். இதன்கண் பண்டைக் காலந்தொட்டு இன்றுவரை தமிழ் நாட்டில் வழங்கிவரும் இசைக் கருவிகளைப்பற்றிய செய்திகள் விளக்கப்பட்டுள்ளன. பழைய தமிழ் நூல்களில் இசைக் கருவிகளின் பெயர்களும், அவற்றின் அமைப்புமுறை இயக்க முறைகளும், பிறவும் ஆங்காங்குக் காணப்படுகின்றன. ஆடல் பாடல் கருவி இம்மூன்றும் ஒத்து இயலுமாயின், காண்பார் கேட்பார் எல்லோர்க்கும் சிறந்த இன்பம் பயக்கும் என்றும், அங்ஙனம் ஒத்து நிகழ்தல் "முரசு முழங்கு தானை மூவருங்கூடி அரசவையிருந்த தோற்றம்" போல்வதென்றும், பழைய தமிழ் நூலிற் கூறப்பட்டுள்ளன. ஆகவே மிடற்றுப் பாடல், ஆடல் இவற்றிற்கு உரிய இசைக்கருவிகள் இன்றியமையாதன என்பது புலனும். இக்கருவிகளுள் பல, தமிழ்ப் பெயரால் வழங்கப்படுகின்றன. சிலவற்றிற்கு வேற்று மொழிப் பெயர்கள் உள்ளன. காரணம் அக்கருவிகளுள் சில, வேற்று நாட்டில் தோன்றித் தமிழ் நிலத்திற் கையாளப்பட்டமையும், சில தமிழ்நாட்டுக் கருவிகளாக இருந்து வேற்று மொழியாளராற் கையாளப்பட்டமையுமாம். இந்நூலின் முன்னுரை நான்முகங்களில் "தமிழ்ப்பண்கள் வடமொழிப்போர்வை

யைப்போர்த்து வழங்கலாயின" என்று கூறியபடி தமிழ் நாட்டு இசைக் கருவிகளும் அங்ஙனம் ஆயின என்பது கருதத்தக்கது.

தமிழ் நாட்டில் வழங்கிய இவ் ஆரிய கருவிகளைக் கொண்டே தமிழிசை பண்டைக் காலத்தில் எத்துணை வளர்ச்சி யடைந்திருந்ததென்பதை அறிந்து கொள்ளலாம். இக்கருவிகளின் உருவங்களையும், இயக்கு முறைகளையும் நேராகவும், நூல்களின் வாயிலாகவும் ஆராய்ந்து கண்டு இந்நூலைச் சிறந்த முறையில் எழுதி உதவியவர்கள், புதுவை அரவிந்தாசிரமத்துள்ள அன்பர் திரு. பி. கோதண்டராமன், M.A.,B.L., அவர்களாவர். இவர்கள் முயன்று ஆக்கிய இந்நூல் தமிழ் நிலத்திற்குப் பயன்படுமென்று கண்டு அச்சிடத் தொடங்குங்கால் கோவை ராவ்பகதூர் திரு. C. M. இராமச் சந்திரன் செட்டியார் அவர்கள் B. A.. B. L., திருநெல்வேலி நெல்லையப்பர் திருக்கோயிலிலும், பிற இடங்களிலுமுள்ள ஓவியச் சிலைகளிலிருந்து எடுத்த இசைக்கருவிகளின் படங்களையும், அவற்றை இயக்கு முறைகளைப்பற்றிய குறிப்புக்களையும் சேர்த்துக்கொள்ளும்படி அன்புடன் உதவினார்கள். அப்பகுதி இதன் அனுபந்தமாகச் சேர்க்கப்பட்டுள்ளது. இந்நூல் வெளியீடு தமிழிசை வளம் பெற்றுவரும் இக் காலத்திற்கு மிகவும் உதவியாகும் என்னும் நம்பிக்கை யுண்டு.

மாண்புமிக்க செட்டிநாட்டு ராஜா ஸர். அண்ணாமலை வள்ளல் அவர்களின் ஆதரவில் தமிழ் நிலத்தார் அடைந்து வரும் பேறுகளுள் இஃது ஒன்று. அவர்களின் நன்றி என்றும் நினைவு கூரத்தக்கது. இந்நூலை நல்ல முறையில் எழுதி உதவிய ஆசிரியர்க்கும், சிலை யோவியங்களி

விருந்து படங்களை எடுத்தனுப்பிய திரு. செட்டியார் அவர்களுக்கும், வழக்கம்போல் இதன் வெளியீட்டிற்கு வேண்டுவன செய்து நிறைவேற்றிய தமிழிசை ஆலோசனைக் குழு அமைச்சர் பண்டித வித்துவான் திரு. லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் அவர்களுக்கும், இந்நூலை முற்றும் பார்வையிட்டுத் திருத்தம் செய்து உதவிய தமிழாசிரியர் வித்வான் திரு. மு. அருணாசலம் பிள்ளையவர்களுக்கும், தமிழிசை ஆலோசனைக் குழுத் தலைவன் என்ற முறையில் என் நன்றியறிவைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அண்ணாமலைநகர்
7-11-1945.

மு. கதிரேசன்.

முன்னுரை.

பண்டைத் தமிழர் இசையை மிக விழுமிய கலையாகக் கருதி அதை ஆழ்ந்து பயின்றனர். தமிழ் மொழியை இயல் இசை கூத்து என முக்கூறு படுத்தியதிலிருந்தே அவர்கள் இசையின் பெருமையை எவ்வளவு தூரம உணர்ந்திருந்தனர் என்பது புலனாகும். சங்க காலங்களில் இசைக்கெனத் தனிச் சங்கம் ஒன்று இருந்தது. அதில் இசைவாணர் பலர் இசைக் கலையை வளர்த்துப் பல நூல்கள் யாத்தனர். உலகிலேயே இசை நூல்களைச் சுவடி வடிவில் முதன்முதலாக வெளியிட்டவர்கள் அவர்களேயாவர். கடைச்சங்க காலத்தில், அதாவது, சுமார் 2000 ஆண்டுகளுக்குமுன், அத்தகைய நூல்கள் பல இருந்தனவென்பது சிலப்பதிகார உரைகளின் வாயிலாக நமக்குத் தெரியவருகின்றது. சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, சூளாமணி, கல்லாடம் முதலிய பழந்தமிழ் நூல்களிலும், இசையின் இலக்கணங்களும் இசையைப் பற்றிய பல குறிப்புக்களும் காணப்படுகின்றன. சிலப்பதிகாரம், பரிபாடல் முதலியன இசைத்தமிழ் விரவிய இலக்கிய நூல்களே. தேவாரம் திருவாசகம் முதலிய திருமுறைகளும், திவ்வியப் பிரபந்தமும், திருப்புகழ் முதலியனவும் இசைப் பாட்டுக்களாலாகிய நூல்களே. பண்டைத் தமிழ் வேந்தர் மூவரும் தமிழ் இசையைப் பெரிதும் ஆதரித்து வந்தனர். அவர்கள் மண்டபங்களில் இசையொலி சதாகாலமும் கேட்ட வண்ணமாக இருக்கும். அவர்கள் இசைப்பாணர்களுக்கும் விறலியர்களுக்கும் பெருங்கொடைகள் வழங்கினர்.

இவ்வண்ணமாக வளர்க்கப்பட்ட இசையானது இசை வல்லோரிடத்தும் உயர்ந்தோர் பூட்டுமே நின்றுவிடவில்லை. பாமர மக்களும் இசைக்கலையை ஆர்வத்தோடும் உணர்ச்சியோடும் பாராட்டினர். ஐந்திணைமக்களிடத்தும் தனித்தனிப் பெயர்கொண்ட யாழும், பறையும், பண்ணும் வழக்கிலிருந்தன. கந்துகவரி, அம்மானைவரி, ஊசல்வரி, குரவைப்பாட்டு முதலிய விளையாடற் பாட்டுக்களாலும், ஏற்றப்பாட்டு, காவடிப்பாட்டு, கப்பற்பாட்டு, படையெழுச்சிப்பாட்டு, கல்லுளிப்பாட்டு, கவணெறிபாட்டு, குறத்திப்பாட்டு, மறத்தியர் பாட்டு, ஆயர் பாட்டு, பள்ளுப்பாட்டு, வள்ளைப்பாட்டு, பிள்ளைப்பாட்டு, தாலாட்டு, கண்ணுலைப் பாட்டு, வேந்தர் விருதுப் பாட்டு முதலிய இனிய ஓசையும் நன்பொருளும் நிறைந்த பாட்டுக்களாலும் பல தொழில் மாந்தரும் தம் இன்ப துன்பங்களையும் உள்ளத்தெழுச்சிகளையும் வெளியிட்டனர். நாடேனும் ஆக, காடேனும் ஆக, கடலேனும் ஆக, வறண்ட பாலையேனும் ஆக, யாண்டும் தமிழர் இசை யிசைத்துக் களித்துக் கந்தருவரெனத் திகழ்ந்தனர்.

துரதிருஷ்டவசமாக, பொற்காலம் என்னத்தகும் அக்காலம் நாளடைவில் மறைந்தது. சற்றேறக்குறைய 9-ம் நூற்றாண்டுக்குப் பின் தமிழரின் தனிச்சிறப்புக்களாக விளங்கின யாழும் இசைமரபும் மேன்மேலும் மறையலாயின. 13-ம் நூற்றாண்டில் கருநாடக இசைமரபு தலைதூக்கியது. ஆயினும் அதுவும் தமிழிசை இலக்கணங்களைத் தழுவியதாகவே இருந்தது. அதில் தமிழ்ப் பண்கள் பல வடமொழிப் பெயர்கொண்டு வழங்கலாயின. வடமொழிப்போர்வையையுடையதாயினும், அது தமிழ் மக்களுக்குரியதோர் இசை முறையாகவே வளர்ந்து வளம்பெறலாயிற்று.

இன்று பாரத நாட்டில் தமிழர்களிடையேதான் பல வித இராகங்கள் பாடப்படுகின்றன. வடநாட்டினர் சுமார் இருநூறு இராகங்களையே பாடுகின்றனர். ஆனால் நாமோ ஏறக்குறைய ஐந்நூறு இராகங்களைப் பாடுகின்றோம். நமது நாட்டிலேதான் மிக நீண்ட இசைப்பாடல்கள் பாடப்படுகின்றன. மகா வைத்திய நாதையர் ஓர் இராகமாலிகையை இரண்டு மணி நேரம் பாடுவாராம். தோடி சீதாராமையர் ஒரு தோடிராகத்தை எட்டு நாட்கள் தொடர்ந்துபாடினாராம். அபூர்வமான தானங்களில் அபூர்வமான பல்லவிகள் இங்கே தான் அமைந்திருக்கின்றன. வல்லிசை, சமனிசை, மந்த விசை என்னும் முப்பாகுபாடு நமக்கே உரியது. நமது நாட்டிலேதான் பண்டுதொட்டுத் தாளம், இசையின் அடிப் படையாகவும், அதன் சிறந்த அம்சமாகவும் வழங்கி வருகின்றது. நம்மிடையே சுமார் 175 தாளங்கள் வரைக்கும் உண்டு எனக் கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது. நமது தமிழ் நாட்டிலேதான் பற்பல சங்கீத, தாள, சுருதி வாத்தியங்கள் வழங்குகின்றன. மிருதங்கத்தைச் சுருதி அமைப்புடன பயன்படுத்தும் முறை தமிழர்களிடையேதான் சிறப்புடன் விளங்குகின்றது. இசைமண்டபங்கள், இசையரங்குகள் அமைப்பதிலும் அவர்களே சிறந்து விளங்குகின்றனர். மதுரை, திருநெல்வேலி, சுசீந்திரம் கோயில்களிலுள்ள மண்டபங்களில் இசைத்தூண்கள் காணப்படுகின்றன. அவ் விடங்களில் 500 பேருக்குமேல் கூட்டமாகப் பண்பாட முடியும். அத்தூண்கள் பாடுவோர்க்குப் பக்கக் கருவிகளாக அமைந்துள்ளன.

தமிழர்கள் எப்போதுமே விரிந்தமனப்பான்மை யுடை யவர்கள். அவர்கள் அயல்நாட்டு இசையின் சிறந்த பகுதிகளை யும் அம்சங்களையும் சிறந்த கருவிகளையும் ஏற்றுக்கொள்ளத்

தயங்குவதில்லை. அவர்களே முதன்முதலாகப் பிடிலின் சிறப்பை யுணர்ந்து அதை ஏற்றுத் தங்கள் இசைக்கேற்பப் பயன்படுத்திக்கொண்டனர். தஞ்சை சரபோஜி மகாராஜா காலத்தில், மேலைநாட்டுப் பித்தளைத் துளைக்கருவிகள்பலவும், கிளாரியம் (கிளேரினட்) என்னும் சிறந்த கருவியும், பாண்டு அல்லது கூட்டியமும் நமது இசையரங்கில் இடம்பெறலாயின. ஆனால், இவையாவும் நமது இசைக்குப் பொருத்தமாகத் திருத்தியமைக்கப்பட்டன. முத்துசாமிதீட்சிதர் மேலைநாட்டு வர்ணமெட்டுக்களில் வடமொழிப்பாடல்களை இயற்றியுள்ளதும், வீணை குப்பையர் மேலைநாட்டுச் சங்கீதக் குறியீடுகளைத் தமது பாட்டுப் புத்தகத்தில் வழங்கியிருப்பதும் குறிப்பிடத் தக்கன.

இன்றும், நமது இசைக்கலை இவ்வளவு சிறப்புடன் விளங்குகின்றதாயினும், அது இன்னும் மக்களிடையே பரவாமல் சில ரசிகர்களிடத்தும் இசைப் புலவரிடத்துமே ஒதுங்கி யிருக்கிறது. இசையரங்குகளில் பாடப்படும் பாடல்களிற் பல மக்களுக்கு விளங்காத அயல்மொழிகளில் இயற்றப்பட்டனவாக இருக்கின்றன. பண்டைத்தமிழர்களிடையே இசைக்கலைக்கும் மக்களின் வாழ்க்கைக்கும் ஒரு நெருங்கிய தொடர்பு இருந்து வந்தது. அத்தொடர்பு இப்போது காணப்படவில்லை.

இந்த நிலைமையை மாற்றி இசையை மக்கள் அனைவருக்கும் உரிமைப்படுத்தவும், தமிழர்களை மீண்டும் கந்தருவ வழக்கினராக ஆக்கவுமே தமிழிசை இயக்கம் தொடங்கியுள்ளது. பொதுமக்களின் சார்பாக எழுந்து நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்துவரும்

இவ்வியக்கத்திற்கும், தமிழிசையைவளர்க்கும் தொண்டில் பெரிதும் முனைந்துள்ள வள்ளல் ராஜா சர். அண்ணாமலைச் செட்டியார் அவர்களுக்கும் தமிழர்களின் இசைக்கருவிகளைப் பற்றிய இச்சிறு நூலை எனது தாழ்மையான காணிக்கையாகச் சமர்ப்பணம் செய்கின்றேன்.

சில ஆண்டுகளுக்குமுன் 'குமரன்' ஆசிரியரான திரு. சொ. முருகப்பா அவர்கள் குமரன் இசைமலருக்காக என்னை ஒரு கட்டுரை எழுதும்படிப் பணித்தார்கள். அப்பணியை மேற்கொண்டு நான் எழுதிய கட்டுரையின் திருத்தமான விரிவே இந்நூல் ஆகும். என்னை ஊக்கி ஆதரித்த திரு. முருகப்பா அவர்களுக்கும், இந்நூலில் அடங்கிய சில படங்களைப் போட்டோ பிடித்து உதவியும் எனக்கு ஊக்கமளித்தும் வந்த திரு ஆறு கணேசன் அவர்களுக்கும் என் நன்றி உரித்தாகின்றது.

இரண்டு ஆண்டுகளுக்குமுன் இச்சிறுநூலைப் பரிசீலனை செய்து, இது அண்ணாமலைப் பல்கலைக்கழகச் சங்கீத வகுப்பு மாணவர்களுக்குப் பயன்படக்கூடுமென அபிப்பிராயங் கூறின கழக இசைக்கமிட்டியாருக்கும், இந்நூலுக்குரிய படங்களைச் சேகரிப்பதிலும், இந்த யுத்தகாலத்தில் இதை அச்சிட்டு வெளியிடுவதிலும் பெருமுயற்சிகள் மேற்கொண்ட பல்கலைக்கழக ரிஜிஸ்திரார் திரு. N. விசுவநாதன் M.A.L.T. அவர்களுக்கும், தமிழிசை ஆலோசனைக் கமிட்டியின் அமைச்சரான திருவாளர் பண்டித வித்துவான் லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் அவர்களுக்கும், இந்நூலில் ஆங்காங்குக் காணப்பட்ட பிழைகளையும் அச்சுத்தாள் புருப் பிழைகளையும் திருத்துவதில் அதிக சிரமம் எடுத்துக்கொண்ட

வித்துவான் திரு. மு. அருணாசலம்பிள்ளையவர்கட்கும் என் மனமார்ந்த நன்றியைச் செலுத்துகின்றேன்.

ஸ்ரீ அரவிந்த ஆசிரமம்,
புதுச்சேரி.
1945 ஆகஸ்ட் 11.

இங்ஙனம்,
பி. கோதண்டராமன்.

சுவாமி சுத்தானந்தபாரதியார் அளித்த

நூன் முகம்.

கடவுளின் அற்புதம் இயற்கை. இயற்கையின் அற்புதம் மனிதன். மனிதனின் அற்புதம் பாட்டு. உயிரும் உலகும் ஒலிக்கடலில் மிதக்கின்றன. ஆகாயம் ஒலித்தன்மையுள்ளது. அதினின்றே காற்று, தீ, நீர், மண், பயிர் உயிர் எல்லாம் முறையே எழுந்து உலகாக விரிந்தன ஒவ்வோருயிருள்ளும் உயிராகக்கலந்த ஒரு இறைப்பொருள் உண்டு அதுவே இயற்கையுடல்போர்த்து நடமாடுகிறது. உயிர்வாழ்வெல்லாம் அதன் ஆடலே. அது 'ஓம்' எனச் சுழன்று பரவுகிறது. ஒவ்வொருவர் மண்டையிலும் ஓமொலிகேட்கும். ஒவ்வொருவர் உள்ளத்திலும் உயிர்த்துடிப்பு படபடக்கும். இந்த ஓமொலியே வாழ்வின் இராகம், பாட்டு. உயிர்த்துடிப்பே தாளம். இந்த இராகதாளங்களுக்கேற்றபடி வாழ்க்கை நவரசபாவனையுடன் நடமாடுகிறது.

இத்தகைய உள்தத்துவத்தைக்கொண்டே ஆன்றோர் ஒலிநூலும் இசைநூலும் வகுத்தனர். இசையில் இராகம் தாளம் என இரண்டு பகுப்புண்டு. இவற்றைக் குரலாலும் வாயாலும் கணக்குகளுடன் விரிவாக விளக்கி இசையின்ப மூட்டலாம். வாய்ப்பாட்டு வாய்த்தாளம் கைத்தாளங்கள் இவை முதலில் அமைந்தன. பிறகு நாளடைவில் நூற்றுக் கணக்கான கருவிகள் எழுந்து, இசைக்குப் பலவகையான இன்ப மளித்தன.

ஒவ்வொரு நாட்டிற்கும் இசையொழுங்கும், தாள ஒழுங்கும் உண்டு. ஐரோப்பிய சங்கீதம் சிறுபான்மை குரலாலும், பெரும்பான்மை இசைக்கருவிகளாலும் இயலு

கின்றது. லலாலால, டம்டாம் டுர் டுர் என்று ஐரோப்பிய இசைக்கலை துள்ளிப்பாய்கிறது. அதைக்கேட்கும்போதே சத்தங்களின் இயல்பு வாள்வீச்சுப்போலத்தான் இருக்கிறது. சீன ஜப்பானியக்கலை மெல்லோசை நிரம்பி ஞாவ் ஞவ் என்று குரலெழுப்பி, 'டபடப' என்ற தம்பட்டத்துடன் நடக்கிறது. வடநாட்டுச் சங்கீதக்கலை இன்னும் ஆழ்ந்து சென்று "ஹஅஅ ஹ உஉம்ம்" என்று அடிவயிற்றிலிருந்து பிரம்மரந்திரம் வரையில் சென்று முட்டித் தொண்டையைச் செங்குத்தாகக் கிளப்புகிறது அதன் தாளக்கலையும் "டும்டுண் டுமுக் டுமுக்" என்று ஒரே ஆவர்த்தனமாக முழங்குகிறது.

இசைக்கலையின் ஆழமும் உயரமும் அகலமும் அளந்தவர்கள் நமது தமிழர்களே. தமிழர்களுக்கென எத்தனையோ இசைக்கலை நூல்கள் இருந்தன. எல்லாம் காலச்சுழலில் மறைந்தன. அவற்றின் அடையாளங்கள் மட்டும் சங்கநூல்களிலும் தேவாரப்பாசுரங்களிலும் காண்கின்றன. சிலஆண்டுகளுக்குமுன் நான் ஒரு ஐரோப்பியரைப் "பகவத்கீதை படித்திருக்கிறீரா" என்றுகேட்டேன். எடுவின் ஆர்னால்ட் எழுதிய நூல்தானே. படித்திருக்கிறதாக நினைப்பு" என்றார். நமது பாரதபூமியில் கண்ணன் உபதேசித்த கீதை ஆங்கிலமாகி ஆர்னல்டு பெயரால் வழங்குகிறது. அதுபோல் நமது தமிழ் இசைக்கலையும் எத்தனையோ நுணுக்கங்களுடன் இலக்கண இலக்கியங்களுடன் வளர்ந்து, காலச்சுழலில் வடமொழிச் சட்டைபூண்டு கருநாடக சங்கீதமானது. எப்படியிருந்தாலென்ன, எப்படியாவது எந்த வடிவிலாவது நமது பண்டைத் தமிழிசைதான் இன்று தென்னாட்டை ஆளுகிறது என்போம். இசை இலக்கணத்தில் மிகவிரிவும், ஆழமும், வானோங்கிய உயரமுங்கொண்டு ஆயிரம் வகையான இன்னிசையின்ப

மளிப்பது தமிழ்ப்பாட்டுத்தான். புகழ்பெற்ற இசைமணிகளைத் தமிழன்னை உலகிற்களித்தாள். தியாகையர் முதல் கவிகுஞ்சர பாரதிவரையில் உள்ள கர்நாடக சங்கீத சாகித்யவித்வான்கள் அனைவரும் தமிழ்நாட்டில் பிறந்துவளர்ந்தவர்களே. தமிழர் தமது பாட்டை இன்பத்தின்மேல் இன்பமாக வளர்க்க எத்தனையோ இசைக்கருவிகளைக் கண்டனர். ஒரு இலக்கணத்திற்கு ஏராளமான இலக்கியங்கள் மலிவதுபோல், தமிழ் இசைக்கலைக்கு எண்ணற்ற கருவிகள் பெருகி வழங்குகின்றன.

அக்கருவிகள் சில வடக்கிலும் மேற்கிலுங்கூடச் சென்றிருக்கின்றன. இன்று நமதுநாடு அடிமைக்குழியில் விழுந்து கிடப்பதால், நமது கலைகளும் தாராளமான வளர்ச்சியில்லாமல் தேய்ந்துபோய், உயிர்துடித்துக்கொண்டிருக்கின்றன. நமது பழைய நூல்கள் கட்டுக்கட்டாய்க் கடல்கடந்து சென்று பாரிஸ் லண்டன் புத்தகசாலைகளில் திருப்பள்ளி கொண்டிருப்பதுபோலவே, நமது பண்டைப்போர்க்கருவிகளும் இசைக் கருவிகளுங்கூடக் காட்சிச் சாலைகளின் மூலையைக்காக்கின்றன. நூற்றுக்கணக்கான கருவிகளில் இன்று வழங்குவன இருபது முப்பதாம் இருக்கலாம். இவற்றையாவது தமிழர் காக்கவேண்டும். இன்றேல் இவையும் இன்னும் சிலகாலத்தில் காட்சிச்சாலைக்குப்போய்விடும் தமிழ்இசையின் ஊமைச்சின்னத்தை அங்கே அலமாரிகளிலே தான் காணலாம். ஒரு ஐரோப்பியன் தனது நாட்டு மொழியும் பாட்டும் பாண்டும் பறையும் முழங்கினாலே தலையாட்டிக் குதிப்பான். ஒவ்வொருநாட்டினருக்கும், விலங்குகளுக்குங் கூடத் தற்காப்புணர்ச்சியுண்டு. 'தனது தன்னவர்' என்ற பற்றுதல் உண்டு.

தமிழருக்கு இப்பற்றுதலும் கருத்தும் கவனமும் இன்னும் ஆயிரம் மடங்கு அதிகமாகவேண்டும்.

இன்று தமிழ்நாடு விழித்துத் தமிழ்முழக்கம் செய்கிறது. இனி உறக்கம் இராது. ஒருநாட்டின் நாகரிகத்தை அதன் இசைக்கலையால் அறியலாம். தமிழர், பாட்டு, புகழ் இரண்டிற்கும் இசை என்கிற பொருத்தமான பெயர் தந்தனர். இசைக்கலைதான் ஒருநாட்டின் புகழ் இசைக்கலையில் வாய்ப்பாட்டுடன் பல கருவிகளும் சேரும். தமிழர் வழங்கும் இசைக்கருவிகளை இனியாவது வழிவழியாக வழங்கி உலகிற்குச் செவி விருந்தளித்துப் போற்றவேண்டும்.

தமிழ்நாட்டில் வழங்கும் இசைக்கருவிகளையும், அதை வழங்கிய பெரியார்களையும், கருவிகளின் நுட்பத்தையும் உண்மைத்தமிழன்பரான திருவாளர். பி. கோதண்டராமன். அவர்கள் இந்நூலில் மிகவும் நன்றாக விளக்கியிருக்கிறார்; ஒவ்வொரு இசைக் கருவியையும் அவர் நேரே பார்ப்பது போல் ஒலியப்பொலிவுடன் விளக்கியிருக்கிறார். இந்நூல் தமிழ் இசைக்கலைக்கு ஒரு சிறந்த நல்லணியாகும். இன்று கொழுந்தேறிப்பொலியும் தமிழிசை இயக்கத்திற்கு இந்நூல் அருந்துணையாகும். இந்நூலாசிரியர் நல்ல கல்விமான் தமிழார்வங்கொண்ட தமிழர்; நீண்டகாலமாகக் கலைக் கட்டுரைகள் எழுதி வருகிறார். தமிழுலகம் இவரை நன்றாக அறியுமாதலால், அதிகஞ்சொல்லத்தேவையில்லை. இப்படிப்பட்ட தமிழ்ப் பணிகளை, இக்காலத்தமிழர் போற்றவேண்டும். அது வருங்காலம் தமிழுக்குப் பெரிய ஆக்கந்தரும்.

'தமிழர் இசைக்கருவிகள்' என்ற இந்நூல் தமிழ்க்கருவி களுக்கே புதிய இசை யளிக்கிறது. இத்தகைய நூல்கள் தமிழி லக்கியத்திற்கு மேன்மேலும் இசையளித்தோங்குக.

எந்தாய் வாழ்க!

சுத்தானந்த பாரதி.

இந்நூல் எழுதுவதற்குப் பயன்பட்ட கட்டுரைகள், நூல்கள், சஞ்சிகைகள் முதலியன.

---

1 சிலப்பதிகாரம். டாக்டர் சுவாமிநாதையர்.
2. பத்துப் பாட்டு. ,, ,,
3. சீவகசிந்தாமணி. ,, ,,
4. புறநானூறு. ,, ,,
5. நல்லுரைக்கோவை. ,, ,,
6. சிலம்புச் செல்வம். சுவாமி சுத்தானந்த பாரதியார்.
7. தொல்காப்பியம் பொருளதிகாரம். பவானந்தம் பிள்ளை
8. தமிழ வரலாறு. ரா இராகவையங்கார்.
9. சங்கநூற் கட்டுரைகள். இளவழகனார்.
10. கருநாடக சங்கீத புஸ்தகம். பி. சாம்பமூர்த்தி.
11. அற்புத உலகம். பெ. நா. அப்புசாமி.
12. சில்பஸ்ரீ.
13. செந்தமிழ்ச்செல்வி.
14. சுதேசமித்திரன். (சுவாமி விபுலானந்தரின் சொற்பொழிவுகளும் யாழ்களின் படங்களும்)
15. கல்கி. (ஆடல்பாடற் பகுதிகள்)
16. ஆனந்தவிகடன். (,, ,,)
17. பாரதமணி.
18. தமிழ்ப் பொழில். (சுவாமி விபுலானந்தர் கட்டுரைகள்)
19 தினமணி ஆண்டுமலர்கள்.
20. ஈழகேசரி.
21 குமரன் இசை மலர்.
22 காவேரி ,, ,,

23. Music of India. H. A. Popley.
24. Hindu Music. Raja S. M. Tagore.
25. Indian Music. Shabinda Begum.
26. Music of the Orient and the Occident. Margaret Cousins.
27. South Indian Music. P. Sambamoorthy.
28 The Psychology of Music. H. P. Krishna Rao.
29. The Music and Musical Instruments of Southern India and the Deccan. Captain Day.
30. Catalogue of Musical Instruments exhibited in the Goverment Museum Madras, Edited by P. Sambamoorthy.
31. "Hindu" Supplements.
32. "Hindusthan Standard" Supplements.
33 Triveni.
34. Encyclopaedia Brittanica.
35 The New Educator Encyclopaedia.
36. Tamil Lexicon.

பொருளடக்கம்.

1. இசையொலி

   கருவியும் குரலும்.

2. இசைக் கருவிகளும் அவற்றின் வகைகளும்.

3. தோற்கருவிகள்

   பழைய நூல்களில் கூறப்படும் தோற்கருவிகள் — கோயில் விழாக்களில் வாசிக்கப்படும் கருவிகளாகிய தவில், தப்பட்டை, டமாரம் முதலியன, நகார், பஞ்சானன முரசு அல்லது குடமுழா, உறுமி, கிடுகிடு, உடுக்கை, குடுகுடுப்பை, மிருதங்கம், மத்தளம், டோலக்.

4. நரம்புக் கருவிகள்

   யாழ், வீணை, தம்பூரா, கோட்டுவாத்தியம், கெத்துவாத்தியம், பிடில் (வயலின்), சாரங்கி, சிதார் முதலியன.

5. துளைக் கருவிகள்

   குழல், நாகசுரம், ஒத்து, முகவீணை, கிளாரியம், மகிடி, தாரை, திருச்சின்னம், கர்ணா, கொம்பு, சங்கு.

6. கஞ்சக் கருவிகள்

   தாளம், சாலரா, சப்பளாக்கட்டை, கண்டாமணி, சேகண்டி.

7. இதர கருவிகள்

கடம், கைச்சிலம்பு, மோர்சிங்கு, ஆர்மோனியம், ஜலதரங்கம்.

8. பாண்டும் வாத்தியக்கோஷ்டியும்.

9. முடிவுரை.

10. அநுபந்தம்.

உ

கடவுள் துணை.

தமிழர் இசைக் கருவிகள்.

1. இசையொலி.

மக்களின் உள்ளத்தில் எழும் உணர்ச்சிகள், மிடறு அல்லது தொண்டையின் மூலமாகவேனும், செயற்கைக் கருவியொன்றின் மூலமாகவேனும் இனிய ஒலிகளாக வெளிப்பட்டு, வீரம், பயம், இகழ்ச்சி, அற்புதம், இன்பம், அவலம், நகை, நடுநிலை, உருத்திரம் ஆகிய ஒன்பது வகைச் சுவைகளை அளிக்கவல்லதோர் இன்பக்கலையாகப் பரிணமிக்கின்றன. இவ்வின்பக்கலையே இசையெனப்படும். மிடற்றினின்று எழும் இசையும், கருவியினின்று எழும் இசையும் இக்கலையின் இரு அம்சங்களாகும்.

நமது இசை பெரும்பாலும் வாயால் பாடப்படும் சிறப்பியல்பு உடையது. ஆதலால் அதில் குரலே பிரதானமாக விளங்குகின்றது. இசையை நிர்ணயிக்கும் உரிமை குரலுக்கே உண்டு. கருவி குரலின்வழி நிற்கவேண்டியதே. அது இசைபாடுவோனிடமிருந்தே தன் சீவனைப் பெறுகின்றது. நம்மைப் பாடத் தூண்டும் ஓர் இயல்பும், பாடுவதற்குரிய ஒரு சக்தியும் பிறப்பிலிருந்தே நம்மிடம் இயல்பாக அமைந்துள்ளன. ஓராண்டுள்ள குழந்தையுங்கூட இராகம் நீட்டுவதைக் காண்கின்றோம். கருவியில் வாசிக்க விருப்பமும் ஆற்றலும் ஏற்படுமுன்பே, வாயால் பாடும் விருப்பமும் ஆற்றலும் நமக்கு ஏற்பட்டுவிடுகின்றன.

வாயால் பாடுவதற்கோ அல்லது கருவியில் வாசிப்பதற்கோ மூலமாக இருப்பது, நாதம் அல்லது இசையொலியாகும். இந்த நாதம் அல்லது இசையொலி எவ்விதம் எழுகின்றது என்பதைச் சிறிது கவனிப்போம்.

சடப்பொருளின் அசைவினாலும் அவ் அசைவின் அதிர்ச்சியினாலும் ஒலி எழுகின்றது. இவ்வொலியை நாம் எவ்விதம் கேட்கிறோம்? சடப்பொருளின் அசைவினால் ஏற்படும் அதிர்ச்சியினால் காற்றில் அலைகள் எழுகின்றன. இவ் அலைகள், அதிர்ச்சி அளவின் எல்லைக்குள்ளிருக்கும் நமது செவியை எட்டி, செவியிலுள்ள சவ்வுப் படுதாவில் அதிர்ச்சியை உண்டுபண்ணுகின்றன. இந்தச் சவ்வுப் படுதாவுக்குப் பின்னேயிருக்கும் சிறிய அறைகளில் நாதம் உண்டாகி நரம்புகளின் மூலமாக ஒலியுணர்ச்சி ஏற்படுகின்றது. அதிர்ச்சியின் அளவு அல்லது வீச்சு அதிகரிக்கும்போது ஒலியும் பெருகிப் பலமாகக் கேட்கின்றது. நாம் இங்கே குறிப்பிட்டவை எவ்வித ஒலிக்கும் பொருந்தும்., நாம் இசைக்குரிய இன்னொலியைக் கேட்பது எங்ஙனம் என்பதே கேள்வி. அதற்கு நாம் மேலே சொன்ன அதிர்ச்சியின் அளவையும் வீச்சையும் முறைப்படுத்தி இனிய உணர்ச்சியைத் தரும் ஒலிகளைத் தேர்ந்தெடுத்தாகவேண்டும். இவ் விதமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒலிகளே சுருதிகளும் சுரங்களும் ஆகும். சுரங்களின் சேர்க்கையே இசை எனப் படுவது.

நாம் மேலே சொன்ன இசையொலியை நம் இச்சைப் படி எழுப்ப வல்லதொரு நுண்கருவியே இசைக்கருவி. ஒவ்வொரு இசைக் கருவியிலும் ஒலியை எழுப்புவதற்குரிய ஒரு சாதனம் அல்லது சாதனங்கள் அமைந்திருக்கின்றன.

உதாரணமாக, தந்தியின் அசைவினால் தம்புராவிலும், காற்றின் அசைவினால் புல்லாங்குழலிலும், தோலின் அசைவினால் மிருதங்கத்திலும் ஒவ்வொருவிதமான ஒலி எழுகின்றது. இவ்வண்ணம் எழும் ஒலியைப் பெருக்குவதற்குரிய இதர சாதனங்களும் அவற்றிலேயே அமைந்துள்ளன.

இவ்வண்ணமாகவே மனிதனிடம் இசையுண்டாவதற்கான சாதனங்கள் யாவற்றையும் இறைவன் மானிட உடலிலேயே அமைத்திருக்கிறான். மனிதனின் மிடறு அல்லது தொண்டையே அவனது பிரதான இசைக்கருவியாகும். தொண்டைக்குழாய், தொண்டையிலுள்ள லாரிங்க்ஸ் என்னும்இசைப்பெட்டி, சுவாசப்பை, கர்ணபேரி ஆகியவை குரலுக்கென ஏற்பட்ட உறுப்புக்களாகும். இவ்வுறுப்புக்களின் கூட்டுறவினாலேயே இனிய குரல் எழுகின்றது. இதை இன்னும் சிறிது விரிவாக விளக்குவோம்.

கிராமபோனையும் அதில் பிரதானமாக அமைந்துள்ள ஒலிப்பெட்டியையும் நாமெல்லோரும் அறிவோம். அந்த ஒலிப்பெட்டியைப் போலவே மனிதனிடத்திலும் அவன் தொண்டையில் "லாரிங்க்ஸ்" என்னும் முக்கோண வடிவான ஒலிப்பெட்டி ஒன்றுள்ளது. நாம் சுவாசிக்கும் காற்று அதன்மூலமாக உள்ளே சென்று வெளியே வரவேண்டும். இப்பெட்டியில் தொண்டை நாண்கள் என்னும் துடிக்கும்படியான மெல்லிய தோல்கள் உள்ளன. இவை பக்கவாட்டத்திலுள்ள சதைகளினால் இழுக்கப்பட்டுக் காற்றுக்குழாயின் துவாரத்தைக் கதவுகள் போல மூடிக்கொள்ளுகின்றன. சுவாசப்பை கருமான் உலைக்கூடத்துத் துருத்தியைப்போலக் காற்றை அனுப்புகின்றது. அக்காற்று, தொண்டைநாண்களை அசைக்கிறது. அதனால் சப்தம் உண்டாகிறது. அவ்வசைவு, தொண்டை, வாய் முதலான இடங்களிலுள்ள காற்றினால்

வனுப்பட்டு வெளிக்காற்றில் ஒலியாகப் பரவுகின்றது. தொண்டைநாண்கள் எவ்வளவுக்கெவ்வளவு மென்மையாக இருக்குமோ, அவ்வளவு சுருதியும் அதிகமாக இருக்கும். இந்நாண்கள் இளைஞரிடமும் பெண்பாலாரிடமும் மென்மையாக இருக்கும். அதனலேயே அவர்களின் சுருதி அதிகமாக விளங்குகிறது. இவ்வண்ணம் சப்தங்கள் உண்டாகும்போது, ஆதார சுருதிகளுடன் பல்வேறு பரிவார சுருதிகளுங் கலந்துவருகின்றன. இப்பரிவார சுருதிகளின் எண்ணிக்கை, உறைப்பு ஆகியவற்றிற்குத் தக்கபடியே சப்தங்களின் தன்மையும் மாறுபடும். மேலும் இவைகளுக்கு மனிதனின் வாய், மூக்குகளின் அமைப்பை மாற்றி வெளிவரும் சப்தத்தைக் கட்டுப்படுத்த முடிவதால் உயிரெழுத்துச் சப்தங்களை உச்சரிக்க முடிகின்றது.

வாய்ப்பாட்டிற்குக் குரலே பிரதானமானதால், இனிமையான குரலைப் பெறும்பொருட்டு நாம் அதைப் பயிற்சி செய்வது இன்றியமையாததாகும். குரல் அல்லது சாரீர நலமுடையோரே இசைக்கலையில் பிரபல வித்வான்களாகக் கூடும் என்பது யாவரும் அறிந்த விஷயம்.

2. இசைக்கருவிகளும் அவற்றின் வகைகளும்.

பாரதநாட்டில் குரலின் இசையே பெரிதும் மதிக்கப்படுவதாயினும், அதன் சுரசுருதிகளைக் காப்பதற்கும், தாளலயங்களைக் குறிப்பதற்கும், பின்னணி ஒத்தாக அமைவதற்கும் இசைக்கருவிகள் இன்றியமையாதனவாகின்றன. இத்தேவைகளைப் பூர்த்திசெய்யும்பொருட்டே பலவிதமான கருவிகள் அமைக்கப்பட்டுப் பண்டுதொட்டு நம்மிடையே

வழங்கிவருகின்றன. இக்கருவிகளுள், இசை பாடும்போது பயன்படும் ஒருவகையும், நாடகத்திற்கு மட்டுமே உரிய மற்றொரு வகையும், இசை, நாடகம் ஆகிய இரண்டுக்கும் உரிய இன்னுமொரு வகையும் இருந்துவருகின்றன.

முன்னோர் அளித்த கருவிகள்.

நம் முன்னோர்கள், தங்களுடைய நீண்டகால ஆராய்ச்சியினாலும் அனுபவங்களினாலும், ஒவ்வொருவகைக் கருவிகளையும் பரிபக்குவப்படுத்தி மிக உன்னத நிலையை அடையும்படி செய்துள்ளனர். நமது தமிழ்நாட்டில் பண்டைக் காலத்தில் குரலாற்பாடுவோரும், கருவியாற் பாடுவோரும் பலர் இருந்துவந்தனர். இசைக்கென்றே பாணர் என்னும் ஒருவகைச் சாதியார் இருந்தனர். அவர்கள் ஊர்தோறும் சென்று, ஆங்காங்குச் செல்வர்களையும் அரசர்களையும் குடிமக்களையும் மகிழ்வித்து, இசைக்கலையை நாடு முழுதும் பரப்பிவந்தனர். அவர்கள் ஓர் ஊரிலிருந்து மற்றோர் ஊருக்குப் போகும்போது பெரியவும் சிறியவுமான பல வகைக் கருவிகளையும் கொத்துக்கொத்தாகத் தோள்களில் தூக்கிச்செல்வது வழக்கமென்றும், அவர்களுடன் ஆடல் பாடல்களில் வல்ல பாடினிகளும் விறலிகளும் சென்றனரென்றும், பத்துப்பாட்டு, புறநானூறு முதலிய பண்டைத் தமிழ் நூல்களிலிருந்து நாம் அறிகிறோம்.

நம் முன்னோர்கள் தங்களது நீண்டகால வரலாற்றில் அவ்வக்காலத் தேவைகளுக்குப் பொருத்தமான பலவித இசைக்கருவிகளைச் சமைத்துக்கொண்டனர். நாடெங்கும் கோயில்களும் சமய உணர்ச்சியும் பரவியபோது, திருவிழாக்களின் பொருட்டும் சமயச் சடங்குகளின் பொருட்டுமே பல

விதக் கருவிகள் தோன்றி வழங்கலாயின. இவற்றை நமது ஆகம சாத்திரங்கள் விரிவாகக் கூறுகின்றன. நாட்டுப் புறங்களில் மக்களின் கூத்துக்கும் களியாட்டங்களுக்கும் இயைந்த பல்வகைக் கருவிகள் இவ்வண்ணமே உண்டாயின. மகம்மதியரின் படையெழுச்சிக்குப் பின், பல புதிய கருவி கள் புகுந்து பையப்பையப் பழக்கத்திற்கு வரலாயின. ஐரோப்பியரின் ஆட்சி ஏற்பட்டபின், நமது கலையின் சம்பிர தாயத்துக்கு ஒத்துவராத பல அன்னிய கருவிகள் தாராள மாய் நுழைந்ததன் பயனாக, நம்முடைய பழைய கருவிகள் சீரழிந்தன. பழைய கருவிகளை உபயோகித்து வந்த குடும் பங்கள் ஆதரவு இழந்து அக்கருவிகளில் வாசிப்பதை நிறுத்திவிட்டபடியால் அவற்றில் பல வழக்கொழிந்து மறையலாயின. சமீபகாலமாகப் பிரபலமடைந்துவரும் சினிமாக்களிலும், ஸ்டூடியோக்களிலும், ரேடியோவிலும், சுதேசக்கருவிகளைவிட அயல்நாட்டுக் கருவிகளுக்கும், தென் னாட்டுக் கருவிகளைவிட வடநாட்டுக் கருவிகளுக்கும் சலுகை காட்டப்படுகின்றன. ஆயினும், பண்டைக் கலையைக் கை விடாமல் போஷித்துவரும் நம்முடைய கோயில்களும், மடா லயங்களும் பல அபூர்வமான கருவிகளை இன்னும் ஆதரித்து வருவதும், நம்முடைய சமூகச் சமயச் சடங்குகளிலும், விழாக்களிலும் இன்னும் பல பழையகாலக் கருவிகள் வாசிக் கப்பட்டு வருவதும் கண்கூடு. நிலைமையை இம்மட்டோடு விட்டுவிடாமல் தமிழ்நாட்டிலுள்ள பழைய இசைக்கருவிகள் யாவற்றிற்கும் புத்துயிரளிப்பதும், இன்று மறுமலர்ச்சி யடைந்துவரும் தமிழிசையில் அவற்றிற்குரிய இடத்தை மீண்டும் அளிப்பதும் இன்றியமையாதனவாகும். இன்று தீவிரமாகப் பரவிவரும் தமிழிசை இயக்கத்தில், இவ்விஷயத்

தையும் ஓரளவு கவனிக்கவேண்டும் என்னும் நோக்குடனேயே ஈண்டுத் தமிழர் இசைக்கருவிகளைப்பற்றி ஒரு சிற்றாராய்ச்சி செய்யப்படுகின்றது.

இசைக்கருவிகளின் வகைகள்.

இசைக்கருவிகள், சாதாரணமாக, தோற்கருவிகள், நரம்புக்கருவிகள், துளைக்கருவிகள், கஞ்சக்கருவிகள் என நான்குவகையாகப் பிரிக்கப்படும். தப்பட்டை, டமாரம், மிருதங்கம். மத்தளம் போன்று தோலால் மூடப்பட்ட கருவிகள் தோற்கருவிகள் எனப்படும். யாழ், வீணை, பிடில் (வயலின்) போல நரம்பு அல்லது தந்திகளுடன் கூடிய கருவிகள் நரம்புக்கருவிகள் எனப்படும். குழல், நாகசுரம் போன்று துளைகளில் காற்றைச் செலுத்தி வாசிக்கப்படுங் கருவிகள் துளைக்கருவிகள் எனப்படும். சாலரா, சப்ளாக் கட்டை போல ஒன்றோடொன்று அடிக்கப்படுங் கருவிகள் கணம் அல்லது கஞ்சக்கருவிகள் எனப்படும்.

கருவிகள் எதற்காகப் பயன்படுகின்றனவோ அதைக் கொண்டு, கருவிகள், கச்சேரி அல்லது இசையரங்கு வாத்தியங்கள், கோயில் வாத்தியங்கள், யுத்த வாத்தியங்கள், கிராம மக்களின் வாத்தியங்கள் என நான்கு வகைகளாகப் பிரிக்கப்படும். வீணை, குழல், மிருதங்கம், கோட்டுவாத்தியம் போல்வன கச்சேரி வாத்தியங்கள். கொம்பு, தாரை, திருச்சின்னம், பூரி, உடல் போன்றன கோயில் வாத்தியங்கள். பேரி (முரசு), துந்துபி முதலியன யுத்த வாத்தியங்கள். நெடுங்குழல், முரசு, பறை, தாளம் ஆகியவை கிராம மக்களின் வாத்தியங்கள்.

கச்சேரி அல்லது இசையரங்கில் வழங்கும் வாத்தியங்களைச் சுருதி வாத்தியங்கள் என்றும், தாள வாத்தியங்கள் என்றும், சங்கீத வாத்தியங்களென்றும் மூன்று விதமாகப் பிரிப்பர். ஒத்து, தம்பூரா போன்றவை சுருதி வாத்தியங்கள். மிருதங்கம், கடம், கஞ்சிரா, தவில், மோர்சிங்கு, சாலரா, சப்ளாக்கட்டை, சிலம்பு முதலியன தாள வாத்தியங்கள். இசைப்பாடல்களும், இராக ஆலாபனைகளும் வாசிக்கக் கூடிய வீணை, பிடில், கோட்டுவாத்தியம், குழல், நாகசுரம், சலதரங்கம் போன்றன சங்கீத வாத்தியங்கள்.

இவை யாவற்றையும் அடுத்த அத்தியாயங்களில் விவரமாக ஆராய்வோம்.

3. தோற்கருவிகள்.

பழைய நூல்களில் கூறப்படும் தோற்கருவிகள்.

இசைக் கருவிகளில் மிகப் பழைய காலத்திலிருந்து வருவன தோற்கருவிகளேயாகும். மானிட வரலாற்றின் பிற்காலங்களில்தான் துளைக்கருவிகளும் நரம்புக்கருவிகளும் ஏற்படலாயின.

பண்டைத் தமிழர்களிடையே, தோலால் செய்யப்பட்ட முப்பத்தொரு முழவுகள் வழங்கின - என்று சிலப்பதிகாரம் (3,27) அடியார்க்குநல்லார் உரையிலிருந்து தெரியவருகிறது. புறநானூறு, பத்துப்பாட்டு, சீவகசிந்தாமணி, பெருங்கதை, இறையனார் அகப்பொருள் ஆகிய பழைய நூல்கள் வேறு சில முழவுகளின் பெயரையும் நமக்கு அறிவிக்கின்றன. இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையான ஒலியோடு

கூடியிருந்தன எனவும் தெரிகிறது. படகம், பேரிகை, இடக்கையினுல் அடிக்கப்படும் பெருமுரசாகிய இடக்கை, மத்தென்ற ஓசையை எழுப்பும் மத்தளம், சல்லென்ற ஓசையையுடைய சல்லிகை, கரடியின் முழக்கம்போன்று ஒலிக்கும் தட்டைப்பறையான கரடிகை, பாதி உருண்டை வடிவமும் உரத்த ஓசையுமுடைய பெரும்பறையான குடமுழா ஆகிய முழவுகள் அகமுழவு எனப் பெயர்பெற்று முதல்தரமானவையென மதிக்கப்பட்டன. தக்கை, தண்ணுமை, தகுணிச்சம் என்னும் மூன்று வகைகள் அகப்புறமுழவெனப் பெயர்பெற்று நடுத்தரமானவை எனக் கருதப்பட்டன. கணப்பறை என்னும் புறமுழவு கீழ்த்தரமானதென்றும், இரங்கற்பறையான நெய்தற்பறை, புறப்புறமுழவு என்றும் கூறப்பட்டன.

மேலும், முரசு, நிசாளம், துடுமை, திமிலை என்னும் நான்கும் வீர முரசு எனப்பட்டன. முரசு மிகப் பெருமை வாய்ந்ததாகும். தமிழர் போர்த்துணையாகக்கொண்ட பல கருவிகளுள் தம் வீரமுரசினைத் தெய்வத்தன்மையுடையதாகப் பாராட்டியுள்ளனர். "பலி பெறு முரசம்" எனப் புறநானூறு கூறுவதால் அதற்குப் பலியிட்டனர் எனத் தெரிகிறது. அரசன் அதை அரண்மனையில் வைத்துப் பூசித்துவந்தான். இவ் வீரமுரசுடன், மணமுரசு, கோடைமுரசு என்னும் முரசு வகைகளும், நாழிகை முழவு, காலை முழவு எனக் காலத்தைத் தெரிவிக்கும் இரண்டு முரசு வகைகளும் இருந்தன. யாமங்கள்தோறும் கொட்டப்படும் பறைகளும் இருந்தன.

இன்னும், இடைசுருங்கிய பறையான உடுக்கை, மொகுமொகுவென்று ஒலிக்கும் தமருகம், முல்லைத் திணைப்

பறையான தடாரி, குறிஞ்சிநிலப் பறையான தொண்டகம், மருதநிலப் பறையான கிணைப்பறை, நெய்தல்நிலப் பறையான மீன்கோட்பறை, பாலைப் பறையான நிரைகோட்பறை, ஒருகட்பறைகளான பதலை, மோந்தை, கைப்பறையான விரலேறு, செய்திகளை நகரத்தாருக்கு அறிவிக்கும் பறையான கோட்பறை, பகைவரிடமிருந்து ஆநிரையைக் கவரும்போது அடிக்கும் ஆகோட்பறை, பெரும்பறை முதலியவும் வழங்கின.

இவ்வண்ணமாகப் பழைய நூல்களில் காணப்படும் எண்ணிறந்த பலவகைத் தோற்கருவிகளைப்பற்றிய விரிவான செய்திகளை இக்காலத்தில் நாம் சரிவர அறிந்துகொள்ள முடியாதவர்களாக இருக்கிறோம். ஆயினும், அவற்றுள் சிலவேனும் இக்காலத்தில் நம்மிடையே வழங்கிவருவது கண்கூடு. நாட்டுப்புறங்களில் இன்னும் பலவிதமான பழங்காலத் தோற்கருவிகள் வழங்குகின்றன. மணக்கோலம், பிணக்கோலங்களிலும், தெருக்கூத்துகளிலும், கோயில் திருவிழாக்களிலும், தப்பட்டை, தவில், துடி, தமுக்கு, டமாரம், கோட்டி, மத்தளம், சிடுசிடு, உறுமி, உடுக்கை, நகார், பம்பை, பேரி, சல்லரி, மல்லாரி, மிருதங்கம் முதலிய பலவிதமான பறைகள் முழங்குகின்றன. இவற்றுள் சிலவற்றைக் கவனிப்போம்.

தப்பட்டை

கோயிலிலும், விழாக்களிலும் வாசிக்கப்படும் தோற்கருவிகள்.



சூரியப்பிறை சந்திரப்பிறை

இவை மாரியம்மன் கோயில்களில் உபயோகிக்கப்படுவன.

(By kind permission Superintendent, Government Museum, Madras)

தவில் என்பது கோயில் மேளவாத்தியங்களில் ஒன்று. அது பூசாகாலங்களிலும், உற்சவங்களிலும், திருமணம் பண்டிகை முதலிய சடங்குகளிலும், நாகசுரம், ஒத்து, தாளம் என்னும் கருவிகளுடன் கொட்டப்படுகிறது.



தவில் (நாகசுரம், தாளம்)

உடல் என்பது கோயிலுக்குள்ளேயே வாசிக்கப்படும் ஒருவித வாத்தியம். இது அமைப்பில் தவிலைப்போலவே இருக்கும். ஆனால், இதன் ஒலி ஓங்காரத்தொனியை ஒத்திருக்கும். இதைப் பூசாகாலங்களில் மட்டுமே அடிப்பார்கள். புதுவை காளதீசுவரன் கோயிலில் உடல் ஒன்று ஒரு மூலையில் தொங்கவிட்டிருப்பதைக் கண்டேன். அதை இப்போது எவரும் அடிப்பதில்லையென அறிகிறேன்.

டமாரம். இது ஒருவகையான சிறுமுரசு. உற்சவ விக்கிரகங்கள் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படும்போது இரண்டு டமாரங்களை இணைத்து எருதின்மீதேற்றி அடித்துச் செல்வர்.

நகார்

நகார் என்பது ஒரு பெரு முரசு. இது கோயிலிலேயே ஓரிடத்தில் நிரந்தரமாக வைக்கப்பட்டுத் தீப ஆராதனை முதலிய பூசாகாலங்களில் அடிக்கப்படும். ஊர்வலங்களின்போது சில சமயம் இதனை வண்டியில் ஏற்றி இதை அடிப்பவனும் வண்டியிலேறிக்கொண்டு இரு சிறு கோல்களால் அடிப்பான். அபூர்வமாக யானையின்மீது வைத்து அடித்துச்செல்வது முண்டு.

பஞ்சானன முரசு அல்லது குடமுழா.

மேலே சொன்ன கோயில் வாத்தியங்களுடன், ஐம்முக முடைய சிறப்புவாய்ந்த முரசு ஒன்றுளது. அது பஞ்சமுக வாத்தியம் என்றும், பஞ்சானன முரசு என்றும் வழங்கும். சங்க இலக்கியத்திலும், பெருங்கதையிலும், தேவாரத்திலும் கூறப்படும் குடமுழா இதுவேயென்பர்.* இம்முரசு உலோகத்தினால் செய்யப்பட்ட ஒரு பெரிய காலிக் குட வடிவில் அமைந்துள்ளது. இதற்குத் தலையில் ஐந்து வட்டமான வாய்கள் உண்டு. நடுவேயுள்ள வாய் மற்ற வாய்களைவிடப்

---

* இம்முரசைப்பற்றிய விரிவான விவரங்களை அறிஞர் T. G. ஆராவமுதன் அவர்கள் "இந்து" வார அனுபந்தம் ஒன்றில் படங்களுடன் விளக்கியுள்ளார். அவருடைய விளக்கத்திலுள்ள சில குறிப்புகளை நான் ஈண்டுக் கையாண்டுள்ளேன்.

பெரிது. ஒவ்வொரு வாயும் தோலால் மூடப்பட்டிருக்கும். இதை வாசிப்போன் இருகைகளாலும் இவற்றின்மீது அடிப்பான். ஒவ்வொரு வாயினின்றும் ஒரு தனி இசை பிறக்கும். இதன்காரணமாகவே இவ்வாத்தியத்தைப் பஞ்சமகாசப்தம் எனவும் கூறுவர். இவ்வாத்தியம் கோயிலுக்குள் இதற்கெனச் செய்யப்பட்ட ஒரு சட்டத்தின்மீது வைக்கப்பட்டிருக்கும். தமிழ்நாட்டில் இவ்வாத்தியம் இப்போது வெகு அபூர்வமாகவே காணப்படுகிறது. திருத்துறைப்பூண்டியில் ஸ்ரீபாவ அவுஷதேசுவரசுவாமி கோயிலிலும், திருவாரூர் ஸ்ரீ தியாகராஜ சுவாமி கோயிலிலும், திருவானைக்காவிலுமே காணப்படுகிறது.



திருத்துறைப்பூண்டியில் உள்ளது. – திருவானைக்காவில் உள்ளது.
பஞ்சமுக வாத்தியங்கள்.

திருத்துறைப்பூண்டியில் தியாகராஜ சுவாமி உற்சவத்தின்போது இது முழக்கப்படுகின்றது. இது வெண்கலத்தாலானது. சற்றேறக்குறைய முட்டை வடிவமானது. வாய்கள் மான்தோலால் மூடப்பட்டுள்ளன. இதன் உயரம் இரண்டடி மூன்றங்குலம். மிகவும் பருத்துள்ளவிடத்தில்

இதன் குறுக்களவு இரண்டடி மூன்றங்குலம். நடுவாயின் குறுக்களவு எட்டு அங்குலம். இதர வாய்களின் குறுக்களவு ஐந்தங்குலம். திருவாரூர்க் கோயிலிலுள்ள பஞ்சமுகவாத்தியம் இப்பொழுது முழக்கப்படுவதில்லை. சென்னைப் பொருட்காட்சிச்சாலையில் இவ்வகை முழவு ஒன்று காணப்படுகின்றது. இந்த அபூர்வமான முழவு மறைந்துபோகாமலிருக்க வேண்டி ரேடியோ நிலையத்தார் இதையும் பிரபலப்படுத்த வேண்டும்.

உறுமி, உடுக்கை, பம்பை.

உறுமி என்பது தொட்டியர் என்னும் ஒரு சாதியார் குறுந்தடியால் தேய்த்து உறுமல் ஒலியை உண்டாக்கும் ஒருவகை முழவு. ஆட்டங்காட்டப் பழக்கிய பெருமாள் மாட்டுடன் செல்லும் பிச்சைக்காரர்களும் இதையடிப்பர்.


உடுக்கை

உடுக்கை என்பது இடை சுருங்கிய ஒருவகைப் பறை. துடி என்பது அதில் ஒருவகை. பேருடுக்கையைத் தவண்டை என்றும் உடுக்கையென்றுங் கூறுவர். இத்தகைய பேருடுக்கையைத்தான் பூசாரிகள் பேயோட்டும் போதும், சாமியைத் தங்கள் மீதோ பிறரின்மீதோ அழைத்துக் குறி சொல்லும்போதும், குறி சொல்விக்கும்போதும் அடிப்பர். இதன் உடல் பித்தளையாலானது. வாய்கள் ஆட்டுச்சவ்வால் போர்க்கப்பட்டிருக்கும். இருவாய்களையும் பிணைக்கும் கயிறுகள் இடையில் சேர்க்கப்பட்டிருக்கும். இடையில் இவற்றின்மீது ஒரு நாடா சுற்றப்பட்டுத் தொங்கும். இடது வாயின் தோலின்மீது குதிரை மயிரினால் திரிக்கப்பட்ட மெல்லிய கயிறு கட்டப்

பட்டிருக்கும். அதை வீணை என்பர். வலது வாய் ஒன்றின் மீதே அடிப்பர். அடிக்கும்போது அவ்வப்போது இடையின் மீதுள்ள நாடாவை அமுக்குவர். அப்போது ஒரு உறைப் பான ஒலி உண்டாகும். மாரியம்மன் கோயிலிலும் கிராமக் குட்டித்தெய்வங்களின் கோயிலிலும் இது சாதாரணமாக வழங்கும்.

குடுகுடுப்பை என்பது குடுகுடுப்பாண்டிகள் ஆட்டி-ஒலிப்பிக்கும் ஒரு சிறு உடுக்கை. இதை ஆட்டும்போது இடையில் கட்டப்பட்டுத் தொங்கும் ஒரு கயிறு மாறிமாறி இருவாய்களின்மீதுள்ள தோல்களின்மீது பட்டுக் குடுகுடு வென்னும் ஒலியையுண்டாக்கும். தில்லையில் ஆடும் அம்பல வாணனின் திருக்கரத்திலுள்ள தமருகம் என்னும் உடுக்கை இந்தக் குடுகுடுப்பையேயாகும்.

பம்பையென்பது, மாரியம்மன் திருவிழாக்களிலும், பூசாரிகள் உடுக்கையடித்தும் கைச்சிலம்புகளை ஒலிப்பித்தும் ஆடிச் சாமியை அழைக்கும்போதும், பேயோட்டும் போதும் முழக்கும் ஒரு ஜதைப் பறையாகும். அவற்றை வளைவான இரு சிறு கழிகளால் தேய்த்து அடிக்கும்போது ஒரு விநோத ஒலியுண்டாகும்.

பம்பை வாசித்தல்:- (புதுவை மாரியம்மன் விழாவில் ஊர் வலத்தின்போது படமெடுக்கப்பட்டது.)



பம்பை.

(By kind permission of the Superintendent Govt. Museum Madras)

கச்சேரியில் வழங்கும் தோற்கருவிகள்.

மிருதங்கம் என்பது இசையரங்கிலும் பஜனையிலும் கதாகாலட்சேபத்திலும் வாய்ப்பாட்டுக்குப் பக்கவாத்திய மாயும், தாள லயத்திற்கும் நுட்பமான சுருதி பேதங்க ளுக்கும் இன்றியமையாததாயும் வெகுகாலமாகப் பழக்கத் தில் இருந்துவரும் ஓர் இன்னிசைக் கருவியாகும். ஒலியின் தத்துவங்களை நன்குணர்ந்த நம் முன்னோர்கள், தங்களது நீண்டகால அனுபவத்தைக்கொண்டு, கரடுமுரடாக ஒலிக் கும் தன்மையனவான பறைகளில் பலசோதனைகள் செய்து

பார்த்து இறுதியில் இன்னிசையொலிக்கும் இக்கருவியை மாற்றியமைத்திருக்கவேண்டுமென்பது தெளிவு. இக்கருவியின் சித்திரம் அஜந்தா ஓவியங்களில் காணப்படுவதும்,



மிருதங்கம்.

தில்லை நடராசர் கோயிலில் பரதநாட்டிய சாத்திரத்தின் நான்காவது அத்தியாயத்தை அப்படியே கல்லில் செதுக்கிய சிற்பிகள் "லலாட திலகம்" என்னும் பெயருடைய சிற்பமொன்றில் ஒரு நடிகனோடு இரண்டு பாடகர் மிருதங்கம் வாசிப்பதைச் சித்திரித்திருப்பதும், திரிபுரம் எரித்த விரிசடைக்கடவுள் ஆடிய கூத்துக்குப் பக்கவாத்தியமாக இருப்பதன்பொருட்டே இதைப் பிரமன் படைத்தான் என்றும் இதை முதன்முதலாக வாசித்தவர் கணநாதனே என்றும் புராணம் கூறுவதும் இதன் தொன்மையையும் சிறப்பையும் வலியுறுத்துவனவாகும்.

மிருதங்கம் என்னும் தொடர்ச்சொல்லுக்கு மண்-உடல் என்பது பொருளாதலால், இதன் உடல் ஆதியில் மண்ணால் செய்யப்பட்டிருக்கவேண்டும். இப்போது இது பலா அல்லது தேக்கின் ஒரே கட்டையிலிருந்து குடைந்தெடுக்கப்படுகின்றது. இரு வாய்களையும் மூடும் தோல்கள், தோல் வளையங்களுடன் பிணைக்கப்பட்டுத் தோல் வார்களால் இறுக்

கிக் கட்டப்படுகின்றன. இவ்வார்களுக்கும் உடலுக்கும் இடையே செருகப்படும் சிறு கட்டைத்துண்டுகள் கருவியின் சுருதியைத் தேவைக்குத் தக்கபடி மாற்றியமைத்துக்கொள் ளப் பயன்படுகின்றன.

மிருதங்கத்தின் வலது வாய் ஒரே மையமுள்ள மூன்று தோல் அடுக்குகளால் ஆனது. வெளி வட்டத்தை மீட்டுத் தோல் என்றும், உள் வட்டத்தைச் சாப்புத்தோல் என்றும் கூறுவர். வெளி வட்டத்திற்குக் கன்றின்தோலையும், உள் வட்டத்திற்கு ஆட்டின் தோலையும் உபயோகிப்பர். சாப்புத் தோலின் மையத்தில் எப்போதும் கறுப்புப் பசை வட்ட மாகத் தடவப்பட்டிருக்கும். இதைச் சோறு என்றும் கரணை என்றும் மருந்து என்றும் பலவிதமாகக் கூறுவர். இக் கறுப்புப் பசையானது மாங்கனீஸ் என்னும் உலோகத் தூள், சோறு, புளியஞ்சாறு ஆகியவற்றின் சேர்க்கையாகும். இதைத் தடவித் தேய்த்துவிடுவர். பசை நடுவே கனமாயும் ஓரங்களில் இலேசாயுமிருக்கும். இக் கறுப்பு வட்டமே மிருதங்கத்துக்கு அதற்கே உரித்தான ஒலியைத் தரு கின்றது.

இடது வாயில் இரண்டு வட்டங்களேயுள்ளன. வெளி வட்டம் எருமைத்தோலாலும் உள்வட்டம் ஆட்டுத் தோலா லும் ஆனவை. கச்சேரியின் தொடக்கத்தில் இதன்மத்தி யில் சொஜ்ஜிப் பசையையோ அல்லது சோறும் சாம்பலும் குழைத்தவொரு பசையையோ தாற்காலிகமாகத் தடவிக் கச்சேரி முடிந்தபின்னர் அதை விலக்கிவிடுவர். வலது வாயின் ஒலியைவிட ஒரு ஸ்தாயி குறைவாக இருப்பதற்குத் தேவையான அளவுக்கே இப்பசை தடவப்படும்.

வாய்ப்பாட்டில் தாளங்களின் சதிபேதங்களைப் பயின்ற பிறகே இக்கருவியைப் பயிலுவர். மிருதங்கம் வாசிப்பவர் சதிகளைப் பலவிதமாகச் சேர்த்தும் மாற்றியும் தங்கள் திறமையைக் காட்டுவர். அவர்கள் பிரதான பாடகரின் குரலுக்கு இசைய மிருதங்கத்தின் சுருதியை அமைத்துக் கொள்வது இன்றியமையாததாகும். அவர்கள் பாட்டின் காலப்பிரமாணத்திலிருந்து சிறிதும் பிறழலாகாது. திறமையுடன் வாசித்தால் அவர்கள் தாளலயங்களின் அழகுகளையெல்லாம் எடுத்துக்காட்டலாம்.

வேணுகோபால் செட்டியார், தஞ்சாவூர் நாராயணசாமி ஐயர், துகாராம், சாந்தபுரம் சுப்பையா, கும்பகோணம் அழகநம்பிப்பிள்ளை, தட்சிணாமூர்த்தி, (1875 – 1936) பாலக்காட்டு மணி ஐயர் ஆகியோர் இவ்வாத்தியத்தை வாசித்துச் சிறப்பெய்தியவர்கள்.

மத்தளம்.

சிலர் மத்தளமும் மிருதங்கமும் ஒன்றெனக் கூறுவர். ஆனால், மத்தளம் வேறு, மிருதங்கம் வேறு. மத்தளம் மிருதங்கத்தைவிட ஓசை மிக்கது; அது தெருக்களிலும் திறந்த வெளிகளிலும் வாசிப்பதற்கு ஏற்றதேயொழிய, வீட்டிற்குள்ளிருந்து அனுபவித்தற்குரிய இனிமை அதனிடமில்லை. அதன் தொனியே பிரத்தியேகமானது. நுட்பமான சுருதிபேதங்களுக்கு அது ஏற்றதன்று.

ஒருவன் தோற்கருவியை வாசித்துக்கொண்டே தானும் பாடுவது மிக அருமையான காரியம். ஆனால், முப்பது

ஆண்டுகளுக்கு முன், தஞ்சையில் மிருதங்கம் நாராயண சாமி ஐயர் மத்தளத்தை வாசித்துக்கொண்டே நாமாவளிகளையும் மராட்டியப் பதங்களையும் வாசித்ததுண்டு என, திரு. பொன்னையா பிள்ளையவர்கள் கூறுகிறார்.



கஞ்சிரா

கஞ்சிரா.

சல்லரி என்றழைக்கப்பட்டு வந்த பழைய கைப்பறையே இன்று கஞ்சிராவென்னும் பெயருடன் விளங்குகின்றது. இக்கருவி கிலுகிலுவென்னும் ஒரு வித ஒலியையுண்டாக்குகிறது. இதை இசையரங்குகளில் வாசிப்பதைச் சிலர் ஆட்சேபிப்பர். ஆயினும், சிலகாலமாக இக்கருவி பிரபலமாகிவருகிறது. தலைஞாயர் இராதாகிருஷ்ணையர், புதுக்கோட்டை மான்பூண்டியா பிள்ளை, கஞ்சிரா தட்சிணாமூர்த்திப்பிள்ளை ஆகியோர் இதை வாசிப்பதில் கைதேர்ந்தவர்களாக இருந்தனர்.

டோலக்.

டோலக் என்னும் மற்றுமொரு தோற்கருவியும் இசையரங்குகளில் சமீபகாலமாக வழங்கிவருகின்றது. நாற்பது வருடங்களுக்கு முன்னிருந்த வேணுகோபால செட்டியார் இதை வாசிப்பதில் மகா சமர்த்தராக விளங்கினர். புதுக்

கோட்டை சமஸ்தான வித்துவான்களில் ஒருவராக விளங்கிய நன்னுமிய்யா என்னும் மகம்மதியரும் இதை வாசித்துப் பெரும்புகழ் பெற்றார். இவ்வாத்தியத்தைக் கையாலும் ஒரு சிறு கழியாலும் தட்டி வாசிப்பர்.

டோலக்.

[By kind permission of the Superintendent, Govt. Museum, Madras]

4. நரம்புக்கருவிகள்.

யாழ்.

இயற்கையோடு ஒத்துவாழ்ந்த பழந்தமிழர்கள், இயற்கையில் காணும் பொருள்களின் அசைவினாலும், அவை ஒன்றோடொன்று மோதிக்கொள்வதனால் உண்டாகும் அதிர்ச்சியினாலும் ஏற்படும் பலவித ஒலிகளைத் தங்களது நுண்ணிய செவியால் உணர்ந்து அனுபவித்தனர். வேட்டுவர் தங்கள் தொழிலைச் செய்யுங்கால், இறுகக் கட்டிய வில்நாணினின்று எழும் இன்னொலிகளைக்கேட்டு இன்புற்று, இவ் வில்லும் ஓர் இசைக்கருவியாகப் பயன்படக்கூடுமென்பதை நாளடைவில் உணரலாயினர். அங்ஙனமிருக்க, பசுத்திரளைக் கானகத்தில் மேய்க்கச்சென்ற இடையன் தான் செய்து கொண்ட குழலில் பாலைப்பண் வாசித்து அலுத்திருக்கையில், இன்னிசை தரும் வேடன் வில்லின்மீது கவனஞ் செலுத்தலானான். அவன் உடனே குமிழ மரத்தின் உள் துளையுடைய கொம்பு ஒன்றை வெட்டி வளைத்து, அதன் இரு நுனியிலும் துளையிட்டு, அத்துளையின் துவாரத்தின் வழியாக மரல் என்னும் மரத்தின் நாரை உரித்துத் திரித்துக்கொண்ட கயிற்றை நாணாகக் கட்டித் தானும் ஒரு வில் செய்துகொண்டு, அதன் நாணை விரலால் தெறித்துக் குறிஞ்சிப்பண்ணை வாசிக்கலானான். அதிலிருந்து வில்யாழ் பிறந்தது. வில்யாழைப்பற்றிய இவ்வரலாறு பெரும்பாணாற்றுப்படை 175–184 அடிகளில் காணப்படுகின்றது.

இக்கருவிக்கு யாழ் என்னும் பெயர் எவ்விதமாக வந்தது? வில்லின் நாண் அல்லது நரம்புக்கு ஜ்யா என்பது

வடமொழிப் பெயராகும். ஜ்யா என்னும் இச்சொல்லே முதலில் யாஜ் என்றும் பின்னர் யாழ் என்றும் சிதைந்து, இறுதியில் நரம்பையுடைய இவ் இசைக்கருவியையே குறிக்க லாயிற்று எனச் சில ஆராய்ச்சியாளர் கூறுவர்.

இது எவ்விதமாயினும், தமிழகத்தில் மிகமிகப் பழைய காலத்தில் தோன்றிய இவ் வில்யாழே வளர்ச்சியுற்று, பல அனுபவங்கள், ஆராய்ச்சிகளுக்குப் பின்னர், பழந்தமிழ் இலக்கியங்கள் கூறும் நுண்ணிய உறுப்புகள் அமைந்த பலவித யாழ்களாக உருப்பெறலாயிற்று எனத் திண்ணமாகக் கூறலாம்.



பேரியாழ்.

பண்டைத் தமிழர்கள் உபயோகித்துவந்த இக் கருவிகளைப்பற்றிய செய்திகள் யாவும் பத்துப்பாட்டு, அடியார்க்குநல்லார் உரையுடன் கூடிய சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, கல்லாடம் ஆகிய நூல்களிலிருந்து நமக்குக் கிடைத்துள்ளன. அவற்றிலிருந்து தமிழ்மக்கள் பேரியாழ், சீறியாழ் — இதைச் செங்கோட்டியாழ் என்றுங் கூறுவர், சகோடயாழ், மகரயாழ் என்னும் நால்வகை யாழ்களை உபயோகித்தன ரென்று தெரிகிறது. வில்யாழுக்குப்பின் தோன்றிய

பேரியாழ் மூன்று ஸ்தாயிகளிலும் ஏழு சுரங்களை ஒலிக்கக் கூடிய 21-நரம்புகள் அல்லது தந்திகள் கொண்டது. இந்த யாழ் கையில் தூக்கிச் செல்லக்கூடிய விதத்தில் அமைந்தி ருந்தது. நரம்புகளிலிருந்து எழும் ஒலியைப் பெருக்குவ தற்காக இக்கருவியிலேயே அமைந்த குழி பத்தர் என்றும், இப் பத்தரோடு இயைந்து மேலாகவளைந்து நரம்புகளைத் தாங்கிநிற்கும் தண்டு கோடு என்றும், நரம்புகளை முறுக்குவ தற்கும் தளர்த்துவதற்கும் அத்தண்டிலேயே பொருந்தி யுள்ள நரம்புக் கட்டுகள் திவவுகள் என்றும் பெயர்பெற்றி

செங்கோட்டியாழ்.



சகோடயாழ்.

ருந்தன என்பது பொருநராற்றுப்படை (4-18), சிறு பாணாற்றுப்படை (221–229), பெரும்பாணாற்றுப்படை (10–16) முதலிய பாட்டுக்களிலிருந்து தெரிகிறது. பேரி யாழுக்குப்பின்வந்த சீறியாழ் அல்லது செங்கோட்டியாழுக்கு ஏழு தந்திகளே உண்டு. என்பது என்று கூறுவாரும் உளர். வில்யாழும் பேரியாழும் சீறியாழுமே சங்கத் தமிழ் நூல்களில் கூறப்படுவன. சிலப்பதிகார மணிமேகலை காலத்திலே வேறு இரண்டு யாழ்கள் தோன்றலாயின. சிலப்பதிகாரம் அரங்கேற்று காதையில் கூறப்படுவதும், 7-ம் நூற்றாண்டில் திருநீலகண்ட யாழ்ப்பாணர் கையிலிருந்ததும் சகோடயாழ் என்னும் யாழே. இந்த யாழ் 14-நரம்புகள் கொண்டது. மகரயாழ் என்பது 17-அல்லது 19-நரம்புகள்



மகரயாழ்.

கொண்டது. இது மகரமீனின் உருவமுடையதாகலின் அப்பெயர் கொண்டது. கண்ணுக்கினிய அழகிய தோற்றத்தினையுடைய இந்த யாழ் யவனத் தச்சர்களால் செய்யப்பட்டதென்று உதயண காவியத்திலிருந்து தெரிகிறது.

தமிழ் மக்களின் பண்டைச் சிறப்பாக இருந்த இந்த யாழ்கள் அதிக வேலைப்பாடமைந்தன வென்றும், பாணர்கள் விலையுயர்ந்த இரத்தினங்களை இக்கருவிகளுள் போட்டிருந்தனரென்றும், அவர்கள் இவற்றைப் பட்டுத்துணியால் போர்த்திப் பெட்டிகளுக்குள் வைத்திருந்தனரென்றும், பத்துப்பாட்டிலிருந்து தெரியவருகின்றது. இவை மைதீட்டிய கரிய கண்களையுடைய மணப்பெண்போல அழகுவாய்ந்திருந்தன வென்றும், இவற்றின் கோடுகளிலே மலர்மாலைகள் கட்டப்பட்டிருந்தன வென்றும், இவை சித்திரமெழுதிய அழகிய உறையினுள் வைக்கப்பட்டிருந்தன வென்றும் சிலப்பதிகாரம் கானல்வரிப் பாடல் கூறுகின்றது.



ஹார்ப் என்னும் யாழ் வகை.

பழந்தமிழர் வாணிகஞ் செய்து வந்த இஸ்ராயெல், சால்டியா, பாபிலோனியா, பாரசீகம், யவனம் முதலிய நாடுகளிலும், கடல் கொண்ட குமரி நாட்டுத் தமிழர் கடல் கடந்து குடியேறிய மிசிரம் என வழங்கிய எகிப்து நாட்டிலும், சுமேரியாவென வழங்கிய மெசப்பத்தோமியாவிலும் வில்யாழ்களும், யாழினத்தைச் சேர்ந்த ஹார்ப் (Harp) லயர் (Lyre)

என்னும் இருவிதக் கருவிகளும் வழங்கின என்று அந்நாடுகளின் சரித்திர வரலாற்றிலிருந்தும் புதைபொருளாராய்ச்சியிலிருந்தும் தெரியவருகின்றது. இவை தமிழ்நாட்டிலிருந்தே சென்றிருக்கவேண்டுமென அறிஞர் ஊகிக்கின்றனர். மேலே சொன்ன நாடுகளிலிருந்தே ஹார்ப், லயர் என்னும் யாழ் வகைகள் ஐரோப்பாவுக்குச் சென்றனவென்று ஆராய்ச்சிக்காரர்கள் கூறுகின்றனர். ஐரோப்பாவில் இன்றுங்கூட மிகப் பழைய கருவிகளுள் ஒன்றாகிய ஹார்ப் வழங்கிவருகின்றது. இந்தியக்கலைகளும் நாகரிகமும் செழித்தோங்கிய கீழ்க்கடலிலுள்ள சம்பாவில் (இது இப்போது பிரஞ்சு இந்தோ-சீனாவிலுள்ள அன்னம் பிரதேசம் ஆகும்) கிடைத்த சிலையுருவங்கள் சிலவற்றில் தமிழர் கையாண்ட யாழ் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது. வடநாட்டுச் சக்கரவர்த்தியாகிய சமுத்திரகுப்தனின் நாணயங்கள் சிலவற்றில் வில்யாழ் பொறிக்கப்பட்டுள்ளது. சற்றேறக்குறைய, சிலப்பதிகார காலத்தைச்சார்ந்த அமராவதிச் சிற்பங்களில் சகோடயாழின் உருவம் காணப்படுகின்றது. பண்டை யாழ்களையொட்டி இரண்டு இசைக்கருவிகள் காஞ்சிபுரத்துக் கைலாசநாதர் கோயில் சிற்பங்களில் காணப்படுகின்றன. இக்கோயில் எட்டாவது நூற்றாண்டில் கட்டப்பட்டதாகையால், இந்த யாழ்கள் அக்காலத்தில் பழக்கத்திலிருந்தவை எனலாம்.



பண்டை கிரேக்கர் உபயோகித்த லயர் என்னும் யாழ் வகை.

இந்த யாழ்கள் சற்றேறக்குறைய ஒன்பதாம் நூற்றுண்டு அளவில் வழக்கொழிந்து, பாரத நாடெங்கும் பரவிவந்ததும், சீறியாழைப்போலவே பெரும்பாலும் அமைந்திருந்ததுமான வீணையாக உருமாறலாயின. அக்காலத்தில் ஆயிரம் தந்திகளுடைய நாரதப்பேரியாழ், நூறு தந்திகளுடைய கீசகப்பேரியாழ், ஒன்பது தந்திகளுடைய தும்புரு யாழ், ஒரே தந்தியுடைய மருத்துவ யாழ் என நான்கு யாழ்கள் ஏற்பட்டனவெனத் தெரிகிறது. ஆனால், அவை யாழ் என்னும் பெயர்கொண்டனவாயினும், பழைய யாழ்களைப் போலல்லாமல் மிக மாறுபட்ட உருவுடையனவாகவே இருந்தன. அவை உண்மையில் வீணைகளே. பழைய யாழ்கள் பெருவழக்கிலிருந்த காலத்திலேயே வடநாட்டு வீணையும் தமிழ்நாட்டில் வழங்கிவந்ததாகப் பழைய நூல்களிலிருந்து தெரிகிறது. பிரமவீணை என்னுமொரு வீணை பரிபாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது. சிலப்பதிகாரம் கடலாடு காதை உரையில், "கலக நாரதன் கைக்கொள் வீணை அலகிலம்பண மாகெனச் சபித்து" என்னும் ஒரு மேற்கோள் காணப்படுகின்றது. மேலும், மணிமேகலையிலும், சீவக சிந்தாமணியிலும், யாழ், வீணை என்னும் பெயர்கள் வரையறையின்றி வழங்கப்படுகின்றன. உதாரணமாக, மணிமேகலை மகரயாழ் என்றே பலவிடங்களில் கூறுகின்றதாயினும், சிறைக்கோட்டம் அறக்கோட்டமாக்கிய காதையில் 25-வது அடியில் மகரவீணை எனக் கூறுகின்றது. ஆயினும், வீணை வேறு யாழ் வேறு என்பதில் சிறிதும் ஐயமே கிடையாது. ஏனெனில், யாழில் ஏழிசை அல்லது ஏழு சுரங்களை எழுப்புவதற்கு ஏழு தனி நரம்புகள் வேண்டும். அதில் மெட்டுக்கிடையாது. ஆனால் மெட்டு இன்றியமையாது வைக்கப்பட்ட வீணையிலோ ஒரு நரம்புக்கு இசை

கூட்டினுலும், அதிலமைந்த பல்வேறு மெட்டுக்களிலும் பல்வேறு சுரங்களை உண்டாக்கலாம். சுரத்தின் அசைவுகளையும், நுட்பமான நெளிவுகள் குழைவுகளையும், ஏற்றம் இறக்கங்களையும் வீணையில் காட்டலாமேயொழிய யாழில் காட்ட முடியாது. ஒரே தந்தியுடைய யாழெனக் கல்லாடம் குறிப்பிட்ட மருத்துவயாழில் ஏழு சுரங்களை எழுப்ப முடியாதாகையால் அது எவ்விதம் யாழாக இருக்கமுடியும்? அது வீணையேயாகும். இராகத்தின் அசைவுகளும் நெளிவுகளுமே இசைக்கு அழகும் வசீகரமும் அளிப்பன. கமகங்கள் எனக் கூறப்படும் இவையே நாளடைவில் பரவிய கருநாடக இசையின் உயிர்நாடி. தமிழ்நாட்டில் வீணை பரவப் பரவப் பழந்தமிழிசைமரபு மறைந்து இப்புதிய இசைமரபே மேன்மேலும் பரவலாயிற்று. நரம்புகளை ஒத்திசைப்பதே யாழிசையின் மரபு. நரம்புகளை நிறுத்திக் கமகங்களை உண்டாக்குவதற்குரிய ஏற்பாடு யாழில் இல்லை. இசையறிஞர் அடுக்கிசையைக் கைக்கொள்ளவே யாழ் மறையலாயிற்று.

நமது பண்டைத் தமிழிசைச் செல்வத்தையும், ஒத்திசைப்பு முறையையும் மீண்டும் வழக்கில் கொண்டுவர வேண்டுமென்னும் பேரவாவினுல் சுவாமி விபுலானந்தர் அவர்கள் பல ஆண்டுகளாகத் தமிழிசையாராய்ச்சியில் இறங்கிப் பழந்தமிழர்களின் இசை மரபுகளையும் யாழ்களைப்பற்றிய பல விவரங்களையும் "தமிழ்ப்பொழில்" "செந்தமிழ்" என்னும் பத்திரிகைகளின் வாயிலாகவும், பல சொற்பொழிவுகளின் வாயிலாகவும் விளக்கிவருகின்றூர். அன்னூர் சமீபத்தில் யாழிசையோடு ஒத்துழைக்கும் சுருதிவீணையொன்றையமைத்து அதில் ஏழ் பெரும் பாலைகளையும் ஐந்து திறங்களையும் இசைக்கச் செய்து ரேடியோவில் விளக்கஞ்

செய்தது குறிப்பிடத்தக்கதொரு விஷயமாகும். தமிழிசை இயக்கத்திற்கு அப்பெரியார் செய்துவரும் ஊழியங்கள் மிகவும் பாராட்டற்பாலனவாகும்.

பண்டைத் தமிழரின் இசைச்செல்வமாகிய இவ் யாழ்கள் மறைந்து பல நூற்றாண்டுகள் ஆனபின்னரும், இன்றுங்கூடத் தமிழ்நாட்டில் ஒருவித யாழ் இருந்துவருவதாகத் தெரிகிறது. ஸ்ரீமதி மார்க்கரெட் கஸின்ஸ் என்னும் கலாரசிகர், ஒருசமயம் தென்னாட்டில் பிரயாணஞ் செய்கையில் தென்னாற்காட்டில் மலைச்சாதியினரிடையே ஒரு யாழ் வழங்கி வருவதைத் தாம் கண்டதாகவும், மூங்கிற் சட்டத்தில் அமைந்திருந்த அந்த யாழின் நரம்புகளிலிருந்து பலவித இன்னொலிகள் எழும்புகின்றனவென்றும், அச்சாதியினரின் பெண்கள் அதை மீட்டி வாசித்துக்கொண்டே கூத்தாடுகின்றனர் என்றும் கூறுகிறார்.

வீணை.

நமது நாட்டில் மிகப் பழமையும் சிறப்பும் நுண்மையும் ஆற்றலும் வாய்ந்ததும், இன்னிசைகள் பலவற்றை எழுப்பவல்லதுமான கருவி வீணையேயாகும். பழந்தமிழர்கள் கையாண்ட யாழ் போன்ற நரம்புக்கருவிகளில் பல ஆராய்ச்சிகள் செய்தபின்னரே இது பரிபக்குவமடைந்திருக்கவேண்டுமென்பது தெளிவு. இக்கருவியில் பண்டு தொட்டு இந்த நாட்டில் பயிலப்படும் மிகத் தூய இசையை மிகவும் அற்புதமாக இசைக்கலாம். இன்று தசவித கமகங்களையும் இராகத்தின் சாயையையும் அப்படியே காட்டவல்லது வீணையொன்றே. இதுவே இசைக்கருவிகளுக்கெல்லாம் அரசியாக வீற்றிருப்பது.



வீணை.

வீணைக்கு ஒலியை எழுப்பும் தந்திகள் ஏழு. அவற்றில் நான்கு வீணையின் மார்பில் மெட்டுக்களின்மீதுள்ளன. வீணைத்தண்டின்மீது பொருத்தியிருக்கும் சிறு உலோகத் துண்டுகளே இம்மெட்டுக்கள். வீணையில் இரண்டு ஸ்தாயிக்கும் 24 மெட்டுக்கள் உள்ளன. இவ்வாறு நான்கு கம்பிகளுக்கும் மொத்தம் 96 மெட்டுக்கள் உள்ளன. இம்மெட்டுக்களின் மீது செல்லும் கம்பிகளை இடது கைவிரல்களின் நகங்களால் அழுத்தித் தேய்த்துச் சுரங்களை வாசிப்பர். தனியாகப் பக்கத்திலுள்ள மூன்று கம்பிகள் தாளக்கம்பிகள் எனப்படும். அவற்றை வலதுகைச் சுண்டுவிரலால் மீட்டுவர். இவ்வண்ணம் வீணைக்கம்பிகளிலிருந்து எழும் ஒலியை அதன் குடம், தண்டு முதலிய பாகங்கள் பெருக்கியனுப்புகின்றன.

வீணை தஞ்சாவூரிலும் மைசூரிலும் செய்யப்படுகின்றது. தஞ்சாவூர்வீணை தந்த வேலைப்பாடுகளுடன் அழகுறப் பொலியும். வீணையின் குடம் ஒரே மரக்கட்டையிலிருந்து குடைந்தெடுக்கப்படுகிறது. இதற்குத் தஞ்சையில் பலாமரத்தையும் மைசூரில் கருங்காலியையும் உபயோகிப்பர். வீணையின் தண்டும் இம்மரங்களிலேயே செய்யப்படுகின்றது. தண்டு நிற்பதற்காக அதன் கழுத்திற்குக் கீழ் ஒரு போல் பூசணிக்காய் பொருத்தப்படுகிறது. இதுவும் ஒலியைப் பெருக்கப் பயன்படுகிறது. தண்டின் கழுத்து கீழ்ப்புறமாக வளைந்திருக்க அதன் நுனியில் யாளியின் உருவம் அமைக்கப்படுகிறது.

வீணையை ஆதியில் நாரதரே கண்டுபிடித்ததாகவும், கலைமகளே அதன் தெய்வமென்றும் நமது புராணங்கள் கூறும். அது நமது நாட்டில் வேதகாலம் முதற்கொண்டே

வழங்கிவருகின்றது. பரத சாத்திரத்தில் 22 வகையான வீணைகள் கூறப்பட்டுள்ளன. அவை வருமாறு; சித்திரா, கோஷாவணி, சித்திரிகை, கூர்மிகை, சாரங்கம், ராவணஞ் சுரம், கின்னரிவராளி, கீஸ்தி, குச்சிகை, விபஞ்சிகை, பரிவாதினி, சகளவல்லகி, சரவீணை. அநாவிதம், மகதி, பிரகதி, லகுலாக்ஷி, கச்சளா, காந்தாரி, அனுமதம், ருத்திரிகை,

சில்ப ஸ்ரீயின் கையிலிருக்கும் இந்த வீணை 1000-ஆண்டுகளுக்கு முந்தியே மறைந்துவிட்டது.

களாவதி. அவற்றுள் ஒன்றாகிய பரிவாதினி என்னும் வீணை பல்லவ அரசனான மகேந்திரவர்மன் காலத்தில் பழக்கத்திலிருந்ததாகத் தெரிகிறது. கஞ்சி கைலாசநாதர் கோயி

யில் ஓரிடத்தில் வீணாதரனை சிவபெருமானின் சிற்பங்கள் இரண்டு உள்ளன. இச்சிற்பங்களில் காணும் வீணைக்கும் இக்காலத்தில் வழங்கும் வீணைக்கும் பல வித்யாசங்கள் உண்டு. மற்றோரிடத்தில் பார்வதியின் கையில் ஒரு வீணை காணப்படுகின்றது. இது இக்கால வீணையைப்போல் இருக்கிறது. இன்று வடநாட்டில் காணப்படும் வீணை ருத்திர வீணையென்றும், தென்னாட்டிலுள்ள வீணை சரசுவதிவீணை என்றும் வழங்குகின்றன.

இந்தச் சரசுவதிவீணை தமிழ்நாட்டில் சற்றேறக்குறைய 300 ஆண்டுகளாக வழக்கில் இருந்துவருகின்றது. இதை முதன்முதலாகப் பழக்கத்தில் கொண்டுவந்தவர் தஞ்சாவூர் நாயக்கரான ரகுநாதர் (1597 - 1640) ஆவர். அவரும் அவரது பிரதம மந்திரியான கோவிந்த தீக்ஷிதரும் சேர்ந்து இயற்றிய "சங்கீத சுதா" என்னும் இசை நூலில் கூறப்பட்ட 72 மேளகர்த்தா ராகங்களை இசைத்துக் காட்டவே அவர் இந்த வீணையை அமைத்தார். அவர்தாம் வீணைக்கு 24 மெட்டுக்களை ஸ்திரமாக அமைத்தார். அவர் காலத்துக்கு முன் இருபதுக்கும் குறைந்த மெட்டுக்களே இருந்தன. மேலும் அவை ஸ்திரமாகப் பொருத்தப்படாமல் அகற்றக்கூடியனவாகவே இருந்தன.

பாரதநாட்டில் மகம்மதியரின் படையெழுச்சிக்குப்பின் வீணையின் சிறப்பு ஒரு சிறிது மழுங்கவாரம்பித்தது. ஆனால், மொகலாய தர்பாரில் அக்பரின் ஆதரவில் அது மீண்டும் சிறப்புற்று விளங்கியது. மிசிரிஞ்சி என்னும் வித்துவான் அதை வாசித்துப் புகழ்பெற்றான். அக்பர் காலத்தில் இசைமன்னனாக விளங்கிய தான்சேனன் இறந்தபின், அவனுடைய சீடர்கள் ரபியர் என்றும் வைணிகர் என்றும் பிரி

வுற்றனர். வைணிகரே சிறிதுகாலம் வீணையை உயிருடன் வைத்திருந்தனர். வீணையைப் பயிற்சி செய்வது கொஞ்சம் கடினமானதால் சங்கீத ரசிகர்களிடையே அது வழங்குதல் ஒழிந்தது. பின்னர் வீணையின் கலையே போய்விடும்படியான நிலை ஏற்பட்டது. மகம்மதியரின் ஆட்சிக்குப் பின்னரே வந்த, ஆனால் வீணையினத்தைச்சேர்ந்த, சாரங்கி, சித்தார், எஸ்ராஜ், தில்ரூபா முதலிய வாத்தியங்களே இன்று வடநாட்டில் பெரும்பாலும் வழங்குகின்றன. ஆனால் இவை இசைபரசியான வீணைக்கு நிகராகா.

வடநாட்டில் மங்கிய வீணை தென்னாட்டில் செழிக்கலாயிற்று. தமிழ்நாட்டிலும் மைசூரிலுமே வைணிகர்கள் அதைக் கைவிடாமல் வெகுகாலமாகப் போற்றிவந்திருக்கின்றனர். கோகிலகான எம். எஸ். சுப்புலட்சுமியின் தாயாரான ஷண்முகவடிவம்மாள், தேசமங்கலம் சுப்பிரமணிய ஐயர், வாசுதேவநல்லூர் சோமதிசங்கர ஐயர், அச்சுதராம சாத்திரி, சேரமாதேவி சுப்பிரமணிய சாத்திரி, தியாகையர் காலத்திலேயே அவர் நேர் சீடராக விளங்கின பட்டணம் வீணை குப்பையர் ஆகியோர் சிறந்த வைணிகர்களாக விளங்கியிருக்கின்றனர். ஆனால், சமீபத்தில் காலஞ்சென்ற வீணை தனம்மாளைப்போல வீணையின்மீது சர்வாட்சி கொண்டு விளங்கியவர் தமிழ்நாட்டில் வேறெவருமே இருந்ததில்லை. அவரது விரலின் பரிசத்தினால் வீணையிலிருந்து மிக நுண்ணிய, மிக நயமான, இசையொலிகள் எழுந்தன. அவரே வீணைக்குப் புத்துயிரும் பெருமையும் வசீகரமும் அளித்தார். தமிழ்நாட்டு இசையரங்கில் காரைக்குடி சகோதரர்களை அறியாதவர் எவருமில்லை. நமது துரதிருஷ்டவசமாக அச்சகோதரர்களில் ஒருவரான சுப்பராமையர் சமீபத்தில்



தம்பூரா.

காலஞ்சென்றுவிட்டபடியால், இன்று தமிழ்நாட்டில் நாம் இழந்த தனப்மாளுக்குப் பிறகு வீணையின் பெருமையை நிலைநாட்டும் பொறுப்பு காரைக்குடி சாம்பசிவ ஐயரின் மீதே விழுந்திருக்கிறது.

மைசூரில் சமஸ்தான வித்துவானக இருந்து 1928-ல் காலஞ்சென்ற வைணிக சிகாமணி சேஷண்ணு அவர்கள் இக்கருவியை வாசிப்பதில் விசேஷ திறமையுடையவராக விளங்கினர். அவரது சீடராயும் பிரபல ஓவியராயுமுள்ள வெங்கடப்பா என்பவர் வீணைக்கருவியில் சாஸ்திரோக்தமான பல ஆராய்ச்சிகள் செய்து 22 சுரங்களையும் வாசிக்க வல்லதொரு வீணையை அமைத்து வருவதாகத் தெரிகிறது.

தம்பூரா.

தம்பூரா வெளிப் பார்வைக்கு வீணையைப் போலவே இருக்கும். ஆனல், மெட்டுக்களோ, தண்டின் அடியில் பூசிணிக்காய்க்

குடுக்கையோ, தண்டின் நுனியில் யாளி உருவமோ அதற்குக் கிடையாது. இக்கருவி கலகக்கார நாரதரின் கரத்தை எப்போதும் அலங்கரித்ததாகப் புராணங்கள் கூறும். இது மூன்று அல்லது நான்கு நரம்புகள் கொண்டது. இது குரலுக்கும் கச்சேரிகளில் பக்க சுருதிக்கும் பேருதவியாக இருப்பது. இக்கருவி தஞ்சாவூரில் பல வேலைப்பாடுகளுடன் செய்யப்படுகிறது. கஞ்சிக் கைலாசநாதர் கோயிலில் மூன்று விதமான தம்பூராக்கள் செதுக்கப்பட்டுள்ளன. அவை பல்லவர் காலத்தில் நிருத்த சங்கீதத்திற்கு உபயோகப் பட்டனவெனத் தெரிகிறது.

கோட்டுவாத்தியம்.

(திரு. சகாராம ராவ்.)

இதை மகாநாடக வீணை யென்றும் கூறுவர். இது வடிவில் வீணையைப் போலவே இருக்கும். ஆனல், மெட்டுக்கள் கிடையா. ஒரு சிறு கழியால் கம்பிகளை அழுத்தித்தேய்த்து இதை வெகு நுட்பமாக வாசிப்பர். மெட்டுக்கள் இல்லாவிடினும் கழியைக் குறித்த இடங்களில் வைத்து அழுத்துவதனல், கம்பியில் அதிர்ச்சியின் வீச்சை வேகமாக மாற்றிக் கமகங்களை உண்டாக்கக்கூடும்.

இக்கருவியும் தமிழ்நாட்டில் வெகுகாலமாக இருந்துவருகின்றது. காலஞ்சென்ற திருவிடைமருதூர் சகாராம ராவ் இவ்வாத்தியத்தை வாசிப்பதில் இணையற்று விளங்கினர். இன்று ஸ்ரீ நாராயணையங்கார் இதைச் சிறப்புடன் கையாண்டு வருகிறார்.

கேத்து வாத்தியம்.

இது இன்னிசைதரும் நரம்புக்கருவிகளுள் ஒன்று. இதற்கும் மெட்டுக்கள் கிடையா. நரம்புகளின்மீது ஒரு கழியால் தட்டியே இசையெழுப்புவர். இது இசையரங்குகளில் தாளவாத்தியமாகவே உபயோகப்படுத்தப்படுகின்றது. ஆவுடையார்கோயில் அரிஹர பாகவதர் ஒருவர்தாம் இதை இப்பொழுது வாசிக்கிறார்.

பிடில் (வயலின்)

இந்த இன்னிசைக்கருவி, மேலைநாடு தமிழ்நாட்டிற்களித்த ஒரு நன்கொடையாகும். சற்றேறக்குறைய 13-ம் நூற்றாண்டிலிருந்தே இது அங்கே வழக்கத்திலிருந்துவருகிறதாயினும், 1530ல் தான் நன்கு அமைந்த வயலின்

முதன்முதலாகச் செய்யப்பட்டது. கி. பி. 1650-ம் ஆண்டளவில் இது பரிபக்குவமடைந்தது. •18-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில்தான் ஐரோப்பிய பிடில்காரர் ஒருவர் முதன்முதலாக இன்று வழங்கும் பிடிலுடன் தமிழ்நாடு வந்தார். இந்நாட்டிலுள்ள இசைவாணர்கள் இக்கருவியை மிகக் கவனமாக ஆராய்ந்து பார்த்து, இது பெரிதும் பயன்படக்கூடுமென்றுணர்ந்து, உடனே இதைத் தென்னிந்திய இசைக்குப் பொருந்த அமைத்துக்கொண்டனர்.



பிடில்.

தமிழ்நாட்டில் வில்கருவிகள் பண்டுதொட்டு வழக்கிலிருந்துவந்தன. பிணுகம் அல்லது 'சிவன்வில்' இவற்றுள், மிகப் பழமையானதாகும். இதற்கு ஒரே நரம்புண்டு. இது கைவிரலால் மீட்டப்பட்டது. சிவனே இதைக் கண்டுபிடித்ததாகக் கூறுவர். பிடிலின் வில்லை சுமார் 5000 ஆண்டுகளுக்கு முன்னிருந்த இலங்கை வேந்தனான இராவ

ணன் கண்டுபிடித்ததாகக் கூறுவர். இராவணாஸ்தம் என்னும் பெயருடன் வில்லால் மீட்டப்பட்ட மிகப்பழைய கருவியொன்று இருந்துவந்ததாகவும் கூறப்படுகிறது. அது எவ்விதம் அமைந்திருந்ததோ தெரியவில்லை. இப்போது இலங்கையில் "வீணவ" என்னும் பெயருடன் வில்லால் மீட்டப்படும் பழங்கருவியொன்று பிரிட்டிஷ் பழம்பொருட்காட்சிச் சாலையில் வைக்கப்பட்டிருக்கிறது. இவையே இராவணாஸ் தங்கள்போலும். இவை போன்ற சான்றுகளையும் இன்னும் பல ஆதாரங்களையுங்கொண்டு லியோனார்டு ரிச்சார்டு என்னும் அறிஞர், வயலினுக்குப் பிறப்பிடம் இந்தியாவேயென்றும், அராபியா, பாரசீகம் மூலமாக இது ஐரோப்பாவில் பரவியிருக்கலாமென்றும் கூறுகிறார்.

ஆனால், வில் கருவியில் காணப்படாத சில சிறப்புக்கள் மேலைநாட்டிலிருந்துவந்த வயலினில் அமைந்திருந்தன. அது இனிய உரத்த ஓசையையுடையதாயும், கையடக்கமாயும், நுட்பமான கமகங்களையும் சுருதிகளையும் வெகு சுலபமாகவும் கச்சிதமாகவும் உண்டாக்கக் கூடியதாயும் இருந்தது. வில் நீண்டிருந்ததால், தானங்களை அழகுற இசைக்க முடிந்தது. பாடகர்கள் தங்கள் குரல்களின் சக்திக்கு ஏற்பப் பல்வேறு சுருதிகளில் பாடும் பாட்டுக்களுக்கு இயைய இதை உபயோகிக்கவும் முடிந்தது. வாய்ப்பாட்டுக் கச்சேரிகளில் இசைக்கருவிகளின் ராணியான வீணையைப் பக்கவாத்தியமாக வாசிப்பது அவ்வளவு சரியன்று எனக் கருதிய வித்வான்களுக்கு ஒரு பொருத்தமான நரம்புக்கருவி தேவையாயிருந்தது. நல்ல சமயம்பார்த்துப் பிடில் பரவவே, வித்வான்கள் அதைக் களிப்புடன் ஏற்றுக்கொண்டனர்.

இந்தக் கருவிக்கு நான்கு நரம்புகள் உண்டு. இதன் உடல் மிக நுண்ணிய மரத்தாலானது. இதை மீட்டும் வில்லின் நாண் குதிரை மயிரால் செய்யப்படுவது. நமது நாட்டில் சுருதி கூட்டும் விதம் ஐரோப்பிய முறையினின்று முற்றிலும் மாறுனது. இங்கே இது கருநாடக இசையின் தேவைக்கு ஏற்பவே சுருதி கூட்டப்படுகிறது. இதைச் சுருதி கூட்டுவதில் பெரும்பாலும் அனுசரிக்கப்படும் முறையைப் பஞ்சம சுருதி முறை என்பர்.

பிடில் பெரும்பாலும் பக்கவாத்தியமாகவே வாசிக்கப்படுகின்றது. ஆயினும், பிரபல வித்வான்கள் இதைத் தனியாக வாசித்தும் சிறப்படைந்துள்ளனர். வீணைக்கும் குழலுக்கும் உள்ள மதிப்பு இன்று பிடிலுக்கும் அளிக்கப்படுகின்றது. பிடிலைக் கற்றுக்கொள்வோரின் தொகையும் நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றது. இன்று இது நம் வாத்தியங்களுடன் இணைந்து நம் இசையரங்குகளிலும் வாத்தியக் கோஷ்டிகளிலும் இன்றியமையாததோர் இடம் பெற்றுவிட்டது.

முதல்தரமான கருநாடக இசையை இதில் இசைக்க முதன்முதலாகப் பயின்றவர் பாலசாமி தீட்சிதர் (1786–1858) ஆவர். பிடில் வாசிப்பதில் திறமை பெற்றிருந்த படியினுலேயே இவர் எட்டையபுரம் ஜமீனில் வித்வானுக நியமனம் பெற்ருர். இவர் காலம் முதற்கொண்டு தோன்றிய பிடில் வித்வான்களான வடிவேலு, பொன்னுசாமி, சுப்பராயர், சீகாழி நாராயணசாமி பிள்ளை, மலபார் மகாதேவ பாகவதர், புதுக்கோட்டை நாராயணசாமி ஐயர், திருக்கோடிக்காவல் கிருஷ்ணையர், காலஞ்சென்ற பிடில் கோவிந்தசாமி பிள்ளை, பாப்பா வேங்கடராமையர், துவாரம் வேங்கடசாமி

நாயுடு, ராஜமாணிக்கம் பிள்ளை ஆகியோர் இக்கருவியின் மதிப்பை உயர்த்தியிருக்கின்றனர். மைசூர் சௌடையா அவர்களும் இதை வாசிப்பதில் சமர்த்தர். அவர் இக்கருவியில் இன்னும் சில கம்பிகளைச் சேர்த்து ஒரு புதிய கருவியாக அமைத்துக்கொண்டு பலவித இசை ஜாலங்களைக் காட்டி வருகிறார்.

சாரங்கி, சித்தார், தில்ரூபா.

இவை வடநாட்டுக் கருவிகள். ரேடியோவில் பெரிதும் வழங்குகின்றன. தென்னாட்டில் பிடில் வேர் ஊன்று முன் சாரங்கி வழங்கிவந்ததாகத் தெரிகின்றது. "பின் சித்தார்" என்னும் ஒரு வகையான சித்தார் கருவி வடநாட்டில் அபூர்வமாக வாசிக்கப்பட்டுவருகிறது. இக்கருவியையொட்டிய ஒரு கருவி கஞ்சி கைலாசநாதர் கோயில் சிற்பங்களில் காணப்படுகிறது. இக்கருவி தமிழ்நாட்டில் 8-வது நூற்றாண்டிலிருந்து 15-வது நூற்றாண்டு வரையில் வழங்கிவந்ததாகத் தெரிகிறது.

5. துளைக்கருவிகள்.

குழல்.

நம் பண்டைத் தமிழ் இலக்கியங்கள் மிகவும் சிறப்பித்துக் கூறும் இசைக்கருவிகளுள் குழலே முதன்மையாக நிற்பது. குழல் மிகப் பழமையான காலந்தொட்டு வழக்கில் இருந்துவருகின்றது. கானகத்தில் வளரும் மூங்கிலில் வண்டுகள் துளைத்த துளைகளுள் காற்றானது ஒன்றில் புகுந்து மற்றொன்றில் புறப்படும்பொழுது இயல்பாக உண்டாகும் இன்னிசையைக் கேட்டே, நம் முன்னோர்கள் வேய்ங்குழல் அல்லது புல்லாங்குழல் எனப் பெயர்பெற்ற, மூங்கிலினால்

செய்யப்பட்ட நல்லிசைக்கருவியை முதன்முதலாக அமைத்துக்கொண்டனர் எனக் கூறுவர்.

குழல்.

வேய்ங்குழலோடு மற்றும் பலவகைக் குழல்கள் பண்டைத் தமிழர்களிடையே வழங்கிவந்தனவெனச் சிலப்பதிகார உரையிலிருந்து தெரியவருகின்றது. உதாரணமாக, கொன்றைப்பழத்தைத் துருவிச் செய்யப்பட்ட குழல் கொன்றைக்குழல் என்றும், முல்லைக்கொடியால் அமைத்த வளையத்தை வாயினிடத்தே செறித்த இசைக்குழல் முல்லைக்குழல் என்றும், ஆம்பற் பூவைப்போல வெண்கலத்தால் அணைசு செய்து விளிம்பிற் சேர்க்கப்பெற்ற இசைக்குழல் ஆம்பற்குழல் என்றும் பெயர்பெற்று விளங்கின. சந்தனம், செங்காலி, கருங்காலி மரங்களில் செய்யப்பட்ட குழல்களும் வேறு இருந்தன.

குழல் ஏழு சுரங்களையும் உண்டாக்குவதற்குரிய ஏழு துளைகளையுடையதாயும், சுமார் இருபது விரல் நீளமும் நாலரை விரல் சுற்றளவும் கொண்டதாயும் இருக்கும். இதன் துளைகளை முற்றிலும் மூடியோ அரைகுறையாகத் திறந்தோ பலவிதக் கால்குரல், உட்குரல்களை உண்டாக்கலாம். இக்கருவியில் கருநாடக இசையின் எல்லா நுணுக்கமான சாயைகளையும் கமகங்களையும் மிகச் சுச்சிதமாகப் பாடலாம். இது கச்சேரிக்குரிய வாத்தியமாகவும் வீணைக்குரிய மதிப்புடனும் விளங்குகின்றது. பண்டை இலக்கியங்களில் வீணையும் வேணுவும் (குழலும்) மிருதங்கமுமே இந்திய இசையின் பிரதான கருவிகளெனப் பாராட்டப்பட்டுள்ளன.

பண்டைக் கிரேக்கரின் இசைத்தெய்வமாகிய அப்பாலோ, இசையையும் இசைக்கருவிகளையும் படைக்குமுன்பே இந்நாட்டில் குழல் பெருவழக்கிலிருந்தது. கண்ணன் முரளி என்னும் குழலை ஊதியே பிருந்தாவனக் கோபிகளை வசீகரித்தான். பழைய புல்லாங்குழல்கள் எகிப்திலும் யவனத்திலும் தோண்டியெடுக்கப்பட்டுள்ளன. இக்கருவி ஐரோப்பிய வாத்தியக் கோஷ்டியிலும் ஓரிடம் பெற்றுள்ளது. மேலைநாடுகளில் இன்று வழங்கிவரும் ஓபோ (Oboe) என்னும் ஒருவகை இசைக்குழல் இந்நாட்டிலிருந்தே சென்றது என ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

தமிழ்நாட்டில் குழல் ஊதுவதில் பெயர்வாய்ந்தவர் பல்லடம் சஞ்சீவிராவ் அவர்கள். அவர் ஆரோகண அவரோகணங்களும் தாளக்கட்டுகளும் சிறிதும் பிழைபடாமல் நீட்டியும் முடக்கியும் நிறுத்தியும் மற்ற இசைக்கருவிகளுடன் அமையவும் வாசித்துச் செவிக்கு இனிமை பொழிவ

தில் மகா சமர்த்தர். சமீபகாலமாக, டி. ஆர். மகாலிங்கம் என்னும் இளைஞர் குழலில் மிக மதுரமான இன்னிசைகளை எழுப்பி அபூர்வ நயங்களைக் காட்டிச் சங்கீத ரசிகர்களை மகிழ்வித்துவருவதும் குறிப்பிடத்தக்கது.

நாகசுரம்.

தமிழ்நாட்டுக் கோயில்களிலும் திருவிழாக்களிலும், சமூக, சமயச்சடங்குகளிலும் வாசிக்கப்படும் மேள வாத்தியங்களுள் நாகசுரம் ஒரு தனிச்சிறப்புடன் விளங்குகிறது. அது நாகசுரம், நாதசுரம், நாகசின்னம், நாயனம் என்னும் பெயர்களுடன் வழங்குகிறது. தென் ஜில்லாக்களில் பெரிதும் வழங்கும் பெயரான நாகசின்னம், நாசின்னம் என்றும் நாயனம் என்றும் மருவுகிறது. நாகப்பாம்பை மகிழ்விக்கும் சுரங்களை எழுப்புவதால் இக்கருவிக்கு நாகசுரம் என்னும் பெயர்வந்ததென்பர். இது மகுடியைப்போலல்லாமல், சின்னத்தின் இனமாயும், ஏழு சுரங்களையும் எழுப்பக்கூடிய ஏழு துளைகளையுடைய குழல் பொருந்தியதாயும், நாகப்பாம்பின் உருவத்தோடு அமைந்தும் இருப்பதால் நாகசின்னம் என்னும் பெயர் பெற்றதுபோலும். பதினாறாம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட "கூளப்ப நாயக்கன் காதல்" என்னும் நூலில் இது நாகசுரம் என்றே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் சென்ற நூற்றாண்டில் விளங்கிய மகாவித்வான் மாம்பழக் கவிச்சிங்க நாவலர் இக்கருவியை நாகசின்னம் என்னும் பெயராலேயே தம் பிரபந்தங்களில் குறிப்பிட்டிருக்கிறார். இக்கருவி நமது நாட்டில் வெகுகாலமாக இருந்துவருகின்றதென்பதில் சிறிதும் ஐயமில்லை. இது பதினைந்தாம் நூற்றாண்டிலிருந்தே வழங்கிவருகின்றதெனச் சிலர் கூறுவர்.

நாகசுரத்தின் அடிப்பாகத்தில் இசைக்குரிய ஏழு துளைகளும், பிரம்மசுரம் என்னும் ஐந்து வெற்றுத்துளைகளும் உண்டு. இதை வாயில்வைத்து வாசிப்பதற்கு இன்றியமையாத பொருளாகிய நாக்கு, நோறுக்கு எனப்படுகிறது. சில நாயனக்காரர்கள் இதைச் 'சீவாளி' என்றும் கூறுவர். இது கொள்ளிடம் காவேரிப் படுகைகளில் விளையும் கொறுக்கை நாணல் தட்டையால் செய்யப்படுவது. இந்த நாக்கைக் கருவியுடன் பொருத்துதற்கு ஒருவிதத் தந்த ஊசி உபயோகப் படுத்தப்படுகிறது. நாகசுரத்தின் அடிப்பாகம் அனுசம் எனப்படுகிறது. இக்கருவியின் உடல் திருவாவடுதுறையில் ஆச்சா மரத்தில் கடைந்தெடுக்கப்படுகின்றது. இவ்விவரங்கள் புதுவை நாயனக்காரர் ஒருவரிடம் நான் நேரே கேட்டு அறிந்தவையாகும்.

நாகசுரம் வாசிப்பது சாமான்னிய வித்தையன்று. குழலில் போன்று துளைகளைத் திறப்பதாலும் அரைகுறையாக மூடுவதாலும், அரைக்குரல், கால் குரல்களை இதில் எழுப்ப முடியாது. குழாயில் செல்லும் காற்றோட்டத்தின் வலிமைக்கு ஏற்றபடியே அவற்றை உண்டாக்கமுடியும். இது மிகவும் சிரமமான காரியமாதலால், நீண்டகாலப் பயிற்சியின் பின்னரே ஒருவன் இக்கருவியில் தேர்ச்சியடைய முடியும்.

நாகசுரக் கோஷ்டியைத் தஞ்சாவூரில் பெரியமேளம் என்பர். நாகசுரம் வாசிப்பவர்தாம் இக்கோஷ்டியின் பிரதான பாடகரும் தலைவருமாவர். ஒத்து வாசிப்பவரும் தவில்காரரும் தாளக்காரரும் இக்கோஷ்டியைச்சேர்ந்த மற்றவர்கள் ஆவர். சில சமயங்களில் சங்கு ஊதுவோரும் இதில் சேர்ந்து தவில்காரருடன் ஜதி வாசிப்பர்.

நாகசுரம், மேளவாத்தியக் கோஷ்டி.

திருவிழாக்கள், திருமணங்கள், ஊர்வலங்கள், சமய சமூகச் சடங்குகள் ஆகியவற்றில் நாகசுர இசை இன்றியமையாததொன்று. பிரபல நாயன வித்வான்களுக்கு நல்ல சம்மானம் அளிக்கப்படுகின்றது. தமிழ்நாட்டிலுள்ள சில ஜாதியினரே இக்கலையை ஏகபோகமாகப் பயின்றுவருகின்றனர். இக்கலையின் நீண்டகால சம்பிரதாயங்களை அவர்களே போஷித்துவருகின்றனர். கோயில்கள், மடங்கள், சமஸ்தானங்களைச் சேர்ந்த நாயனக்காரர்கள் பரம்பரையாக உத்தியோகம் வகிப்பவர்கள். அவர்களின் ஊழியத்திற்காக நிலங்கள் இனமாக விடப்படுவதுமுண்டு.

இக்கருவியை வாசிப்பதில் புகழ்பெற்றவர்கள், மதுரைப் பொன்னுச்சாமி பிள்ளை, சிதம்பரம் வைத்தியநாத பிள்ளை, திருவீழிமிழலைச் சகோதரர்கள், செம்மனார்கோயில் சகோதரர்கள், கீரனூர்ச் சகோதரர்கள், ராஜரத்தினம் பிள்ளை அவர்கள், திருவிடைமருதூர் வீருச்சாமிப் பிள்ளையவர்கள், திருவெண்காடு சுப்பிரமணிய பிள்ளையவர்கள் ஆகியோராவர். இவர்கள் அனைவருமே கருநாடக இசையின் இலக்கணங்களுக்கு இணங்கச் சுருதி சுத்தமாக வாசித்துத் தம்

இசையை ரசிகர் மட்டுமன்றிப் பொதுமக்களும் சுவைக்கும்படி செய்வதில் சமர்த்தர்கள். ஆயினும், ராஜரத்தினம் பிள்ளையவர்களையும் வீருச்சாமிப் பிள்ளையவர்களையும் நவீன வித்வான்களென்றே கூறவேண்டும். திருவெண்காடு சுப்பிரமணிய பிள்ளையவர்கள் தம்பூரா, பிடில், மிருதங்கம், ஆர்மோனியம் முதலிய பலவிதக் கருவிகளுடன் நூதனமாக வாசிக்கும் ஆற்றலுடையவர். இவர் நாகசுரத்திலும் மகிடி வாசித்துக்காட்டிப் புகழ் பெற்றிருக்கிறார்.

ஒத்து.

இது மேளவாத்தியங்களுள் ஒன்று. இது நாகசுரத்தைப் போலவே இருக்கும். ஆனால் சற்று நீண்டிருக்கும். இதற்குச் சுரம் வாசிக்கும் துளைகளில்லை. சுருதிக்காக மட்டுமே ஊதப்படுவது.

முகவீணை.

இதைச் சின்ன நாகசுரம் எனலாம். இதன் பெயரிலிருந்து இது வீணையுடன் தொடர்புடையதெனக் கருதிவிடலாகாது. இது சிறிதுகாலம் சின்னமேளம் எனப்படும் நாட்டிய வாத்தியக்கோஷ்டியில் ஒன்றாக வாசிக்கப்பட்டு வந்தது. இதன் இடத்தை இப்போது கிளாரியம் (கிளேரினெட்) என்னும் மேலைநாட்டுக்கருவி பற்றிவிட்டதால், இது இப்போது அபூர்வமாகவே வாசிக்கப்படுகின்றது. தீபாவளி, பொங்கல் விழாக்களின்போது முகவீணை வாசிப்போர் வீடு வீடாகச்சென்று மங்களம் பாடிப் பரிசு பெறுவர். தமிழ் நாட்டில் வைஷ்ணவர் கோயில்களில் சில சடங்குகளிடையே இது இன்றும் வாசிக்கப்பட்டுவருகின்றது.

கிளரியம் (கிளேரினெட்)

இது ஐரோப்பியத் துளைக்கருவிகளுள் ஒன்று. இப்போது இது தஞ்சாவூர்க் கூட்டியத்தில் (பாண்டில்) இடம் பெற்றுள்ளது, இதைச் சதிர்க்கச்சேரிகளில் வாசிக்கப்படும் சின்னமேளத்தில் குழலுக்கும் முகவீணைக்கும் பதிலாக முதன்முதலாக நுழைத்தவர் மகாதேவ நட்டுவனுர் ஆவர். தமிழர்கள் இதைக் கருநாடக இசைக்கு ஏற்றதாக ஆக்கி விட்டபடியால் இது இப்போது பிரபலமடைந்து வருகின்றது. தமிழ்நாட்டு ரேடியோக்களில் இதை அடிக்கடி கேட்கிறேம்.

மகிடி.

இது பாம்பாட்டியின் ஊதுகுழல். இக்கருவியை ஊதியே பாம்பாட்டிகள் பாம்பைப் புற்றிலிருந்து வெளிவரும்படி



மகிடி.

செய்து பிடிப்பர். இதைக் கழைக்கூத்தர்களும் தொம்பக் கூத்தர்களும் தம் ஆட்டங்களில் ஊதுவர். இது, சாதாரணமாக, சுரைக்குடுக்கையில் மேலும் கீழும் சிறு வேய்ங்குழல்களைப் பொருத்தி அமைக்கப்படுவது. ஒரு குழல் வெறும் சுருதிக் காகவும், மற்றொன்று விரலால் துளைகளில் வாசிப்பதற்காகவும் இருப்பன. இதில் கேட்கப்படும் இசை புன்னாகவராளி ராகம் என்பர்.



தாரை. கர்ணா.

தாரை, கர்ணா.

இவை பித்தளையால் செய்யப் பட்ட நீண்ட ஊது குழல்கள். தாரை, நீண்டிருக்கும். கர்ணா, அடிப்பாகத்தில் அகன்ற வாயை யுடையதாக இருக்கும்.

திருச்சின்னம்.

திருச்சின்னம் ஜோடியாகச் சேர்த்து ஊதப்படும் குழல். இம் மூன்று வாத்தியங்களும் கோயில்களில் பூசாகாலங்களி லும், திருவிழாக்களிலும் ஊதப்



திருச்சின்னம்.

படுவன. மன்னர், மடாதிபதிகளின் விருதுகளாகவும் இவை வழங்குவன.

கோம்பு வகைகள்.

கொம்பு என்னும் கருவியானது, வடிவுக்குத் தக்கபடி ஊதுகோம்பு, எக்காளம், சிங்கநாதம், துத்தரி, நவுரி எனத் தனிப்பெயர் பெறுகின்றது. விலங்கின் கொம்பால் செய்யப்பட்ட கொம்பை எக்காளம் என்பர். இதை வேட்டுவர் தம் வேட்டையில் ஊதுவர். அறுவடைக் காலத்தில் கழனி மேடுகளில் காவல் புரிவோர் ஓநாய்களையும் கள்ளர்களையும் விரட்டவும் மற்றக் காவற்காரர்கள் விழித்திருக்கவும் இதை ஊதுவர். நீண்ட எக்காள வகையை நவுரி என்பர். அரண்மனைக் காப்பாளர்களும் காவற்படையினரும் மாலையிலும் இரவில் குறித்த நேரங்களிலும் ஒருவித ஊதுகுழலை ஊதுவர். பித்தளை அல்லது வெண்கலத்தால் செய்யப்

கொம்பு வாத்தியம்

பட்ட நீண்டு வளைந்துள்ள ஒருவித ஊதுகொம்பு. உற்சவ காலங்களிலும் ஊர்வலங்களிலும் வாசிக்கப்படுகின்றது.

சங்கு

இது கோயிற் பூசாகாலங்களிலும், திருவிழாக்கள், திருமணங்களிலும், சமயச்சடங்குகள், பிணச்சடங்கு, வெற்றிமகிழ்ச்சி முதலியவற்றின்போதும் ஊதப்படும் ஓர் இயற்கைக் கருவியாகும். வலமாகச் சுழிந்துள்ள சங்கு வகைக்கு வலம்புரிச் சங்கு என்று பெயர். பெரியமேளத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் பித்தளையினால் பூண்கள் கட்டப்பட்ட சங்கை முத்திரைச் சங்கு என்பர். கண்ணன் மகாபாரத யுத்தத்தில் ஊதிய சங்குக்குப் பாஞ்சஜன்யம் என்று பெயர்.

இது பண்டை மக்கள் அறிந்த மிகப் பழைய ஊது கருவிகளுள் ஒன்று. பண்டை இலக்கியங்களில் இது புனித

மான கருவிகளுள் ஒன்ருகக் கூறப்படுகின்றது. இது சாஞ்சி, அமராவதி சிற்பங்களில் காணப்படுகின்றது. இது மகாவிஷ்ணுவின் படைகளுள் ஒன்றெனக் கருதப்படுவது. இது கோயில்களிலேயே பெரும்பாலும் ஊதப்படுவது. பண்டாரங்களும் பிச்சைக்காரர்களும் இதை ஊதிக்கொண்டும் சேகண்டியை அடித்துக்கொண்டும் செல்வதைத் தமிழ் நாடெங்குங் காணலாம். இசையரங்கில் இது ஒரு தாளக் கருவியாகக் கருதப்பட்டு அபூர்வமாக வாசிக்கப்படுகிறது.

சங்கும் சேகண்டியும்

சங்கின் சுழியின் முனையில் துளையிட்டபிறகே ஊத முடியும். சங்கின் ஒலியைச் சங்கநாதம் என்பர். இதற்கே சிறப்பாயுள்ள இதன் ஒலி வெகுதூரம் கேட்கும். சில சங்குகளில் இரு முனைகளிலும் அருமையான வேலைப்பாடுகள் செய்யப்பட்டிருக்கும்.

6. கஞ்சக்கருவிகள்

ஒன்றோடொன்று தட்டியடிக்கும் வாத்தியங்களைக் கண வாத்தியங்கள் அல்லது கஞ்சக்கருவிகள் என்பர். தாளம், சாலரா, சப்பளாக்கட்டை ஆகியவற்றையும், சேகண்டி, கண்டாமணி, கிண்கிணி முதலியவற்றையும் இவ்வகுப்பில் சேர்க்கலாம்.



தாளம்.

தாளம் என்பது மேள வாத்தியத்துடன் வாசிக்கப்படுவதொன்று. அது வட்ட வடிவமானது; வெண்கலத்தாலானது; ஜதையாக உபயோகப்படுத்தப்படுவது.

சாலரா என்பது தாளத்தைப்போன்றதே. ஆனால் இதன் புறம் குவிந்திருக்கும். இது பஜனையிலும், காலட்சேபங்களிலும், இசையரங்குகளிலும் காணப்படும் ஒரு தாளக் கருவியாகும். தாளத்தைப் போல ஜதையாக உபயோகப்படுத்தப்படுவது. இவற்றை ஒன்றோடொன்று பொருத்தியும், விளிம்பின்மீது தட்டியும் தாளத்தின் தேவைக்குத்தக்கபடி இன்னிசை எழுப்புவர்.



சாலரா

சப்பளாக்கட்டை என்பது இசையுடன் சங்கீர்த்தனஞ் செய்வோரின் கையில் எப்போதும் காணப்படும் ஒருவித தாளக்கட்டை. இதில் சதங்கைகள் பொருத்தப்பட்டிருக்கும். இதுவும் ஜதையாகவே உபயோகப்படுத்தப்படுவது.



சப்பளாக்கட்டை

கண்டாமணி, கோத்துமணி. இவற்றைக் கோயில்களிலும் மடாலயங்களிலும் காணலாம். வழிபடுவோரின் உள்

கோத்துமணி



கண்டாமணி

ளத்தில் இவை பக்தியை எழுப்பும்.

7. இதர பலவகைக் கருவிகள்

•

கடம்

கடம் தாளவாத்தியங்களுள் ஒன்று. இது இனிய ஒலி தரும் ஒரு மட்குடமே. இதை விரல் நுனியாலும் உள்ளங் கையாலும் மெல்ல அடிப்பர். மிருதங்கத்தைப்போல் இதுவும் இசையரங்குகளில் ஓர் இன்றியமையாத பக்கவாத்திய மாக விளங்குகின்றது. இனிய ஒலி தருவனவும் உறுதி

கடம் (ஆலங்குடி இராமச்சந்திர ஐயர்)

வாய்ந்தனவுமான பாணைகள் இவ்வுபயோகத்திற்கெனப் பண்ணுருட்டியிலும் மானாமதுரையிலும் செய்யப்படு கின்றன.

பழனி கிருஷ்ணையர், உமையாள்புரம் நாராயணசாமி ஐயர், லால்குடி சப்தரிஷி ஐயர், கலையம்புத்தூர் ரங்கப் பையர், காலஞ்சென்ற தட்சிணாமூர்த்திப்பிள்ளை, ஆலங்குடி ராமச்சந்திரன் ஆகியோர் இதை வாசித்துச் சிறப்பெய்திய வர்கள். கொத்தமங்கலம் சீனிவாசையர் என்பவர் பல பாணைகளைப் பரீட்சை செய்து, விதவிதமான சுருதிகளில் நாற்பது பாணைகளைச் சேர்த்துவைத்திருப்பதாகத் தெரி கிறது.

பூசாரி கைச்சிலம்பு

இதை மாரியம்மன்கோயில் பூசாரிகள் பேயோட்டும் போதும், மாரியம்மனுக்குப் பூசை போடும்போதும், தங்கள்மீதோ, இதரர்கள்மீதோ சாமியை ஆவேசிக்கச் செய்யும்போதும், கையில் பிடித்துக் குலுக்கியும் அசைத் தும் ஆடுவர். இதில் சிறு கூழாங்கற்கள் போடப்பட் டிருக்கும். இது ஜதையாக உபயோகப்படுத்தப்படுவது. இத்துடன் பம்பையையும் உடுக்கையையும் சேர்ந்தாற் போல வாசித்து, விநோதமான ஒலிகளை எழுப்புவர். வாசகர்கள் இதை நம் ரேடியோ நிலையங்களில் சிலசமயம் கேட்கலாம்.



பூசாரி கைச்சிலம்பு.
By Kind Permission Superintendent, Government Museum, Madras)

கைச்சிலம்பு, உடுக்கைக் கோஷ்டி.

மோர்சிங்கு

இதைத் தந்திவாத்தியங்களில் ஒன்று என்று சொல்லலாம். வளைந்த பகுதியை வலது கையில் பிடித்துக்கொண்டு, நீட்டிக்கொண்டிருக்கும் பகுதியை உதடுகளுக்கிடையே பொருத்தி, நடுத்தந்தியின் வளைந்த நுனியை ஆட்காட்டி விரலால் தட்டி வாசிப்பர். வாசிக்கும்போது வாயின் அறையிலிருந்து எதிரொலி எழும்புகிறது.



மோர்சிங்கு

இக்கருவியும் இசையரங்கில் ஒரு பக்கவாத்தியமாக உபயோகப்படுத்தப்படுகின்றது. இதில் தேர்ச்சியடைந்தால் எல்லாச் சதிகளின் சேர்க்கையையும் கச்சிதமாக வாசிக்கலாம். மிருதங்கத்துடன் வாசிக்கப்படும்போது, மொத்த இசையொலி காதுக்கு இன்பமாயிருக்கிறது.

ஆர்மோனியம்

இது, ஆங்கில மொழியில் ரீட் (Reed) என்று சொல்லப்படும் வாத்தியங்களுள் ஒன்று. இது காற்றினால் இயங்குங் கருவிகளுள் ஒன்று என்றுங் கூறுவர். இப்பெட்டியின்

மீதுள்ள கட்டைகளை விரலால் அழுத்தும்போது பெட்டிக்குள்ளேயுள்ள காற்று ஒவ்வொரு விதமாக மாறுதலடைந்து இசையொலியாக எழுகின்றது.



ஆர்மோனியம்

இது ஆஸ்திரியா நாட்டிலிருந்து இந்நாட்டுக்கு வந்தது. இதை ஐரோப்பாவில் பிச்சைக்காரர்களே பெரும்பாலும் வாசிப்பர். மேலைநாட்டு வாத்தியக்கோஷ்டியில் இது இடம் பெறுவதில்லை. இந்நாட்டில் சிறுவர் சிறுமியர் எளிதில் சங்கீதம் கற்றுக்கொள்வதற்கு ஏற்றதாகக் கருதப்பட்டுப் பயிலப்படுகின்றது. நாடக மேடையிலும் பஜனைக்கோஷ்டியிலும் தவறாமல் காணப்படுவது. ஆயினும், இசையின் நுண்மையை உணர்ந்தவர்கள் இதிலிருந்து வரும் ஒலியைச் சகிக்கமாட்டார்கள். அவர்கள் இதை இசையல்ல, இரைச்சலே என இகழ்வர். இக்கருவியானது இசை ஞானம், சுருதி, கமகம், குழைவுகளை மறைத்து இசையைக் குலைக்கிறது. இதனால் கருநாடக இசைக்குப் பல கெடுதல்களே விளைந்துள்ளன. இதை இசையரங்குகளிலிருந்து விலக்கிவருகின்றனர்.

ஜலதரங்கம்

ஜலதரங்கம் என்னும் தொடர்ச்சொல்லுக்கு நீர்-அலைகள் என்பது பொருள். நன்றாகத் தொனிக்கும் 18 பீங்கான் கோப்பைகளை அரைவட்டமான வரிசையில் வைத்துக்கொண்டு அவற்றில் பல அளவில் நீர் வார்த்துச் சுருதியமைத்துக்கொண்டு இரு சிறு கழிகளால் தட்டி வாசிக்கும் ஒருவகை வாத்தியமே இது. ஒவ்வொரு கோப்பையிலும் சுருதியமைப்பதற்கு நீண்டநேரம் பிடிக்கிறது.

ஜலதரங்கம் தனியாகவே வாசிக்கப்படுவது. வாத்தியக் கோஷ்டியிலும் இதை வாசிக்கக்கூடும். சேலம், திருமதி தனம்மாளும், சென்னை ரமணைய செட்டியாரும் இதை வாசித்துப் புகழ்பெற்றுள்ளனர்.

8. பாண்டும் வாத்தியக்கோஷ்டியும்

ஐரோப்பிய இசையின் தொடர்பினால் தமிழ்நாட்டு இசையில் ஏற்பட்ட நவீனங்களில் பாண்டு (கூட்டியம்) என்பதும் ஒன்று. சென்ற நூற்றாண்டில், தஞ்சாவூர் சமஸ்தானத்தில், மரத்தாலும் பித்தளையாலும் ஆன இசைக் கருவிகளைக்கொண்டு ஒழுங்காக அமைக்கப்பட்ட முதல் பாண்டு, கருநாடக இசை முறையில் வாசிக்கப்பெற்றது. ஜர்மானியப் பாதிரியான ஷுவார்ட்ஸ் என்பவரின்கீழ் ஐரோப்பிய இசை பயின்ற அருங்கலை விநோதரான சரபோஜி ராஜா, அவரது உதவி கொண்டு இப்பாண்டுக் கோஷ்டியை அமைத்தார். இப்போது பாண்டுகள் ஜனரஞ்சிதமாகிக் கோயில்களிலும், கலியாணங்களிலும், ஊர்வலங்களிலும் வாசிக்கப்படுகின்றன. இதில் பாண்டுக்கு



ஜலதரங்கம்.

(By Kind Permission of the Superintendent, Government Museum, Madras.)

உரிய பறையும் கிளாரியம் (கிளேரினட்) முதலிய ஊதுகுழல்களும் பிரதான கருவிகளாகும்.

தஞ்சாவூர் பாண்டு பெயர்பெற்றது. சமீபகாலமாகச் சின்னக்கிருஷ்ண நாயுடு என்பார் பாண்டு வாத்தியக்கோஷ்டியொன்று அமைத்து நடத்திவருகிறார். ரேடியோவில் சில சமயங்களில் பாண்டு வாசிக்கப்படுகின்றது. சில மன்னர்களும் தனிப்பாண்டு வைத்திருக்கின்றனர்.

ஆர்கேஸ்டிரா (வாத்தியக்கோஷ்டி)

பெரிய மண்டபங்களில் இசையொலி பரப்பி மக்களின் உள்ளத்தைக் கிளர்த்தவும், வாய்ப்பாட்டுக்குப் பக்கவாத்தியமாகவும் பலவிதமான இசைக்கருவிகளை ஒருங்குசேர்த்து வாசிப்பதே ஆர்கெஸ்டிரா (Orchestra) அல்லது வாத்தியக்கோஷ்டி எனப்படும். இது மேலை நாடுகளில் வெகு சகஜமாக இருந்துவருகின்றது. அங்கே ஒவ்வொரு சமயத்தில் நூறு அல்லது இருநூறு கருவிகளையும் ஒருங்கே சேர்த்து வாசிப்பார்கள்.

வாத்தியங்களை ஒருங்கே சேர்த்து வாசிப்பது நமது நாட்டுக்குப் புதிதன்று. பண்டைக்காலத்தில் பல இசைக் கருவிகளை ஒரே காலத்தில் வாசிப்பதுண்டு என்பதும், நெடும்பல்லியத்தனார் (பல்இயம்-பலவாத்தியங்கள்) என்னும் ஓர் இசைப்புலவர் பல வாத்தியங்களிலும் பயிற்சியடைந்திருந்தாரென்பதும் புறநானூற்றுப் (64, 281) பாடல்களிலிருந்தும், திருமுருகாற்றுப்படை (209), சிலப்பதிகாரம் அரங்கேற்று காதை (125), புறஞ்சேரியிறுத்த காதை (139) முதலிய பழந்தமிழ் இலக்கியங்களிலிருந்தும் தெரிய வருகின்றன. சிலப்பதிகாரம் அரங்கேற்று காதையில்,

குழல், யாழ், கண்ணுமை (மத்தளம்), முழவு (குடமுழா) என்னும் கருவிகள் அனைத்தும் வாய்ப்பாட்டுடன் பருந்தும் நிழலும் போல ஒன்றாகக் கூடி இசைத்தனவெனக் கூறப் பட்டிருக்கின்றது. இந்த நாட்டை மகம்மதிய அரசர்கள் ஆண்டுவந்த காலத்தில், நவபத் என்னும் ஒன்பது பேர்க ளடங்கிய வாத்தியக்கோஷ்டி நகர வாயில்களிலும், அரண் மனை வாயிலிலும், மாடி முகப்புகளிலும், மசூதியிலும் இன்னிசை முழக்கியது. பெரிய மேளம் எனப் பெயர்பெற்ற தஞ்சாவூர் நாகசுரமும் பாண்டும் ஒருவித ஆர்கெஸ்டிராவே. ஆனால், சமீபகாலத்தில்தான், நரம்புக்கருவிகளையும் துளைக் கருவிகளையும் தோல்கருவிகளையும் ஒரு குறித்த விகிதத் தில் சேர்த்து ஒரு மொத்தமான, வளம்பொருந்திய, இன் னிசையை உண்டாக்கலாம் என்னும் எண்ணம் ஏற்படலா யிற்று. இதன் பயனாக நமது நாட்டில் ஏற்பட்டுள்ள ஆர் கெஸ்டிராக் கோஷ்டியில், மொத்த இசையொலியுடன், பல ரகமான தனிக்கருவிகளின் பலதிற ஒலிகளின் சாயைகளை யும் இயல்புகளையும் இன்று நாம் கேட்கக்கூடும். வாய்ப் பாட்டிலும் இசைக்கருவியிலும் ஒரு சாகித்தியத்தை வாசிப் பதைப் போலவே, ஆர்கெஸ்டிராவிலும் இன்று வாசிக்கக் கூடும்.

இன்று நமது நாட்டில் நவீனமாகப் பரவிவரும் இவ் வாத்தியக் கோஷ்டி முறையில் பல சோதனைகளும் ஆராய்ச்சி களும் செய்யப்பட்டு வருகின்றன. நமது கருநாடக இசை யில், ஒரே காலத்தில் இரண்டு சுரங்கள் சப்தியா; அவை ஒன்றன்பின் ஒன்றாகவே வரும். பல வாத்தியங்களைச் சேர்த்து வாசிக்கும்போதும், குறித்த நேரத்தில் ஒரு சுரந்தான் சப்திக்கும். நமது இந்த இசைமுறையை அடுக் கிசை முறை (melodic system) என்பர். ஆனால் மேலை

நாட்டு இசையில், ஒரே சமயத்தில், பொருத்தமான பல் வேறு சுரங்கள் சப்திக்கும். இதை இணைசுர இசை அல்லது ஒத்திசைப்பு முறை (Harmonic system) என்பர். கருநாடக இசையில் இந்த ஒத்திசைப்பு முறையைச் சேர்க்க முடியுமென்று முதன்முதலாகக் காட்டியவர் திரு. ஜோதி பாண்டியன் அவர்களேயாவர். அவருடைய வாத்தியக் கோஷ்டி இதைச் சாதித்துள்ளது. அவரது கோஷ்டியில் வாய்ப்பாட்டுடன் பல வாத்தியங்கள் சேர்ந்து பங்கெடுத்துக் கொள்ளுகின்றன. தமிழ்நாட்டிலுள்ள ரேடியோ நிலையங்களும் ஆர்கெஸ்டிரா முறையைப் பிரபலப்படுத்திவருகின்றன.

முடிவுரை.

நம் முன்னோர்கள் இசை நுட்பங்களில் பல ஆராய்ச்சிகள் செய்து நமக்களித்துச்சென்ற இசைச்செல்வங்கள் பல. அவற்றுள் நம் எண்ணிறந்த இசைக்கருவிகளும் அடங்கும். கருநாடக இசையை நாம் எவ்வளவு ஆர்வத்துடன் ஆதரித்துப் போற்றிவருகிறோமோ, அவ்வளவு ஆர்வத்துடன் நம்முடைய பண்டை இசைக்கருவிகளையும் போற்றுவது நமது இசைக்கலையின் அபிவிருத்திக்கு இன்றியமையாததாகும். நமது இசைக்கே உரித்தான ராகங்களை அயல்நாட்டுக் கருவிகளில் வாசித்தலாகாது. நமது ரேடியோவிலும், சினிமா ஸ்டுடியோக்களிலும், அயல்நாட்டுக் கருவிகள் படையெடுத்து வருவதைத் தடுக்கவேண்டும். நம்முடைய சங்கீத வித்வான்கள் இந்தியக்கருவிகளையே உபயோகிக்கவேண்டும். அவர்கள் செய்யும் கச்சேரிகளில் பிடில், மிருதங்கம் என்னும் கருவிகளே போதுமெனக் கருதிவிடாமல், எல்லாவிதமான

சுதேச வாத்தியங்களுக்கும் இடங்கொடுக்கவேண்டும். நம் கலைக் கழகங்கள் இந்தியக்கருவிகளையே உபயோகிக்க வேண்டும். நமது நாட்டு இசைக்கருவிகளையெல்லாம் பொருட்காட்சிகளிலும் இசை மகாநாடுகளிலும் வைத்து விளம்பரப்படுத்தவேண்டும். நம்முடைய இசைக்கருவிகளைப் பழுது பார்க்கவோ, நவீன முறையில் உற்பத்திசெய்து எல்லோருக்கும் கிடைக்கும்படி செய்யவோ, தகுந்த முறையில் ஸ்தாபனங்கள் ஏற்படவேண்டும். நம்முடைய பழைய கூத்துக்கள், நாடகங்கள், ஓவியங்கள், சிற்பங்கள் முதலிய விஷயங்களில் நமது ஊக்கம் வளர்ந்துவருவதைப்போலவே, நம் பண்டைக்கருவிகள் விஷயத்திலும் நாம் ஊக்கங் காட்டவேண்டும். பண்டை இசைக்கருவிகளைக் காப்பதொன்றே நமது குறியன்று; அவற்றைப் புதுப்பிப்பதும், காலத்திற்கேற்ற முறையில் சீர்திருத்தி, உருமாற்றியமைப்பதும் நம்முடைய விரிவான குறிக்கோளாகும்.

தமிழிசை இயக்கத்தில் ஆர்வமுடையோர் இசையின் ஒரு கூறாகிய இசைக்கருவியின் விஷயத்திலும் ஆர்வங் காட்டுவார்களாக!

அண்ணாமலைப் பல்கலைக் கழக
இசைத்தமிழ் வெளியீடு.

அநுபந்தம்.

தமிழ் இசைக் கருவிகள்

கோவை ராவ்பகதூர்

திரு. C.M. இராமச்சந்திரஞ் செட்டியார் B.A.,B.L.,

அவர்களால் அளிக்கப்பெற்றவை.

அநுபந்தம்.

இங்கே பதிப்பித்திருக்கும் இசைக் கருவிகளின் படங்கள் பெரும்பான்மை திருநெல்வேலி நெல்லையப்பர் கோயிலிலும் சிறு பான்மை அதற்கடுத்த ஆறு கல்லில் உள்ள கிருஷ்ணபுரம் கோயிலிலும் உள்ள மண்டபத் தூண்களிலிருந்து எடுத்து எழுதப்பட்டன. அவைகள் தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, கஞ்சக்கருவி எனத் தமிழ் நூல்கள் கூறும் நால்வகைக் கருவிகளில் வகைக்குச் சில படங்கள் பொறுக்கி எழுதப்பட்டன. கருவிகள் மாத்திரமன்றிக் கருவிகளை ஆளும் வகையையும் தெரிவிக்க முழுப்படங்களையும் வரைந்துள்ளமையால் தண்ணுமையோன் அமைதி, குழலோன் அமைதி, யாழாசிரியன் அமைதி என்ற கூற்றுக்களுக்கு இவைகள் எடுத்துக் காட்டுகளாக இருக்கின்றன. இவ்விரண்டு கோயில்களும் நெல்வேலிப் பாண்டிய மன்னர்கள், பின்வந்த நாயக்க மன்னர்கள் இவர்கள் காலங்களில் புதுப்பிக்கப்பட்டவைகள். ஆதலினாலே இவ்வடிவங்கள் ஐந்து நூற்றாண்டுகளுக்கு முந்தியவை என ஊகிக்கலாம்.

படம் 1.

தோற்கருவி — முரசு அல்லது தண்ணுமை. ஒரு கண் கொண்டது. "மணங்கெழுமுரசம்" எனச் சிலப்பதிகாரம் கூறும். இதனைத் திருவிழாத் தொடக்கத்தில் யானை அல்லது எருது இவற்றின்மேல் ஏற்றி விழாவை அறிவிப்பர். தற்காலத்திலும் கோயில்களில் விழாவைத் தெரியப்படுத்த எருதுகளின்மேல் முரசை ஏற்றி அறிவிப்பர். இங்கு ஒரு பெண் முரசு அறைவதைக் காண்க. பேரி, நகரா, டமாரம் என்று இக்காலத்தில் கூறுவர்.

படம் 2.

தோற்கருவி — பறை; ஒரு கண் கொண்டது. இதுவும் விழாக்களை அறிவிப்பதற்காக முன்னிலையில் அடித்துக் கொண்டு ஏகுவது. விழா நடக்கையிலும் முன்னிலையில் பல பேர் சேர்ந்து அடிப்பதுண்டு. அப்போது அவர்கள் ஆடிக் கொண்டே பறை முழக்குவார்கள். பெரும்பறை சிறுபறை என இரண்டு வகை உண்டு. இப்படத்தில் காணப்படுவோன் ஆடிக்கொண்டு பறை அடிக்கிறான். தற்காலத்தில் ஊர்த் தெய்வங்களின் திருவிழாக்களில் இப்பறை அடித்துக் குதிப்பதுண்டு. தப்பட்டை என்பது இக்காலத்தின் பெயர்.

படம் 3.

தோற்கருவி — முழவு அல்லது மத்தளம். இருகண் உடையது. நீண்டு இருக்கிறது மேற்கு மலை நாட்டுக் கோயில்களில் இது ஆளப்படுகிறது. ஆள்பவனைப் பார்த்தாலும் உருவம் அவ்வாறாகத் தோன்றும். கொண்டையைப் பார்க்க.



படம் 4.

தோற்கருவி — முழவு. குறுகியது. தவில் என்பர் இக் காலத்தார். அடிக்கிறவனுடைய தலை முடியையும் காதணிகளையுங் காண்க. இரு கண்களையும் உடையது. தோற்கருவிகள் தோலைக் கண்களாக உடையன. கையாலும் கோலாலும் அடிக்கப்படுபவை.



படம் 5.

துளைக்கருவி — இரட்டைச்சங்கு. முன்னாளில் நலம் பொலம் இரண்டிற்கும் ஊதப்பெற்றது. இரட்டைச்சங்கு உயர் வகுப்பார்க்கே உரியது. அவ்வுரிமை அரசன் தருவான். ஆலயங்களிலே திருவிழாக்களில் ஊதுவதுண்டு. கடலில் விளையும் சங்குகளில் துளைசெய்து பித்தளைத்தகடு இட்டு ஊது கருவியாக்குவார்கள்.



படம் 6.

துளைக்கருவி — பெருங்கொம்பு. செம்பினால் ஆக்கப் பட்டது. வளைந்துள்ளது. திருவிழாக்களில் முன்னணியில் ஊதிக்கொண்டுசெல்வது. ஊதுவோன் ஆடிக்கொண்டு செல் வது காண்க

படம் 7.

துளைக்கருவி — சிறு கொம்பு. படம் 6-ல் உள்ளது போன்றது. இனி இரட்டைக் கொம்பு அல்லது சின்னம் மெல்லியதாய் நேராக இருக்கும். நுனி விரியவைத்து ஊதுவது. ஆலயங்களிலும மடங்களிலும் உண்டு. கிருஷ்ணபுரம் கோயிலில் செதுக்கப்பட்டுள்ளது.

படம் 8.

துளைக்கருவி — சிறுகொம்பு. ஊதுவோன் மறு கையில் படைக்கருவி இருக்கக் காண்பீர். ஆகவே இக்கொம்பு போரில் ஊதுவதாகும்.

படம் 9.

துளைக்கருவி — வேய்ங்குழல். வங்கியம்என்றும்பெயர். வடமொழியில் வேணுஎன்பர். மூங்கிலால் ஆக்கப்பட்டது. ஏழுதுளைகளைக் கொண்டது. வாயினால் ஊதி, கைவிரல்களால் துளைகளை மூடி நாதம் எழுப்புவது. இதன்கண் காதிற்கு மிக இனியநாதம் தோன்றும். ஆனாய நாயனார் சரிதம் காண்க.

படம் 10.

துளைக்கருவி — பாம்பாட்டி குழல் — மகடி வாத்தியம் என்பர் இக்காலத்தில். வேய்ங்குழல் போன்றது. நடுவில் பருத்த சுரைபோன்ற துருத்தி உள்ளது. பாம்பாட்டி ஊது தலும் பாம்பு ஆடுதலும் காண்க.

துளைக்கருவி — துளை கொண்டது. வாயினால் ஊத நாதம் எழும்புவது. பல துளைகள் வகுத்தலாலே பல நாதங் கள் எழும்பும். கிருஷ்ணாபுரம் கோயிலில் கண்டெடுத்தது.

படம் 11.

நரப்புக்கருவி — கின்னரயாழ். மரத்தால் செய்தஉடல். ஒருபுறம் சுரையும் மற்றொருபுறம் வளைந்த நுனியும் கொண்டது. நரம்புக் கம்பிகள் உடலில் கட்டப்பட்டுள்ளன. கம்பிகள் ஒன்று முதல் 1000 வரை உள்ளனவாம். பொதுவாக இக்காலத்தில் 4 உண்டு. கைவிரலால் அடித்தால் நாதம் எழும்பும்.

கின்னரர் பறவையின் உடலும் மானிடத் தலையும படைத்த வானவர் வகுப்பினர். ஆண் பெண் ஆக இரட்டையரே யாழ் வாசிப்பர். இங்கே காண்பது கின்னர ஆண்வடிவம். அக்காலத்துத் தலைப்பாகை காண்க.

படம் 12.

நரப்புக்கருவி — மகரயாழ். உடல்வளைந்து அகன்று இருக்கும். ஒருபுறம் மகர உருவினது. (சுறாமீன்) மற்றொரு புறம் வளைந்த வாலை உடையது. இரண்டு நுனிகளையும் பிணிப்பன நரம்புகள். மகரயாழுக்கு 17 நரம்புகள் என்பார். அடியார்க்குநல்லார், மற்றயாழ்களில் பேரியாழ் 21 நரம்புகளும் சகோரயாழ் 16 நரம்புகளும் செங்கோட்டியாழ் 7 நரம்புகளும் கொண்டவையென்பார்.



படம் 13.

நரப்புக்கருவி — யாழ். ஒருபெண் ஒருகையில் யாழைப் பிடித்துக்கொண்டு விரல்கள் நரம்புகளை அசைக்க மற்றொரு கை நீட்டிப் பாடுவது காண்க. இது தற்காலத் தம்பூரா போன்ற யாழ்.



படம் 14.

நரப்புக்கருவி — யாழ். ஒருபெண் நேரே எதிர்நின்று ஒரு கையில் யாழை நிறுத்தி மற்றொரு கையைத் தொங்க விட்டு ஓசை எழுப்புவது. சுரை பெரிதாக உள்ளது.

நரப்புக்கருவிகள் — நரம்புகளைக்கொண்டவை. கைவிரலால் ஒலி பரப்புவது. மேலும் வேறு ஒரு நரம்பு வில்லாலும் ஒலி எழுப்புவதுண்டு. இது தற்காலக்கருவி. கிருஷ்ணாபுரம் கோயிலிற் கண்டது

படம் 15.

இது கஞ்சக்கருவி — தாளம் எனப்படும். சீர் என்பார் இளங்கோவடிகள். வெண்கலத்தினுல் செய்யப்பட்ட இரண்டு கருவிகளைக் கொண்டது. பாடும்போது அடிப்பது. மற்ற இசைக்கருவிகளுக்கு உதவி புரிவது. பொதுவாக மிடற்றுக் கருவிக்குச் சாதகமானது. கோயில்களில் வழிபாட்டிற்குப் பயன்படும் மற்றக் கஞ்சக்கருவி மணி ஆகும். போர்களில் சலங்கை, சிலம்பு அடிப்பதுண்டு.

நால்வகைக் கருவிகளோடு மிடற்றுக் கருவியையும் சேர்த்து இளங்கோவடிகள் இவ்வாறு கூறுகிறுர்.

"யாழும் குழலும் சீரும் மிடறும்
தாழ்குரல் தண்ணுமை யாடலொடு இவற்றின்"

அரங்கு — 26, 27.

அண்ணாமலைப்பல்கலைக் கழகத்து இசைத்தமிழ் வெளியீடுகள்.

இசையறிவுடையோர் யாவரும் எளிதிற் பயின்று கொள்ளத் தக்க முறையில் விளக்கமான சுர தாளக் குறிப்புகள் அமைந்தவை.

உயர்ந்த பதிப்பு! *குறைந்த விலை!!*

இனிய இசைப் பாடல்கள்!!!

தொகுதி 1. பரிசுபெற்ற தமிழிசைப் பாடல்கள 46.

திருவாளர்கள் : டி. இலக்குமணபிள்ளை B.A., கீழ்வேளூர் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, விசுவநாத சாஸ்திரியார், கிருஷ்ண மாச்சாரியார், பாபநாசம் சிவன் என்னும் இவர்கள் இயற்றிய கீர்த்தனங்களும், கா. சுப்பிரமணிய பிள்ளை M, A., M L., அவர்கள் எழுதிய ஆராய்ச்சி முகவுரையும் அடங்கியுள்ளன.
(கைவசமில்லை) விலை ரூ. 2.

தொகுதி 2. கீதவர்ண முதலியன 104.

திருவாளர்கள் : டைகர் வரதாச்சாரியார், திருப்பாம்புரம் சாமிநாதபிள்ளை முதலிய இசைவல்லுநர் பதினொருவரால் இயற்றப்பட்ட சஞ்சாரி கீதம், இலக்கணகீதம், சுரசதி, சதி சுரம், பிரபந்தம், ஆதிதாளவர்ணம், அடதாளவர்ணம் என் பனவும், சுரவரிசை, இரட்டைச் சுரவரிசை, அலங்காரம் என்பனவும் அடங்கியுள்ளன. (கைவசமில்லை) விலை ரூ. 3

தொகுதி 3. தமிழிசைப் பாடல்கள் 75.

திருவாளர்கள் : நீலகண்ட சிவன், டி. இலக்குமண பிள்ளை B. A., கோபாலகிருஷ்ண பாரதியார், அச்சுத தாசர்

வேதநாயகம் பிள்ளை, அருணாசலக்கவிராயர் என்னும் இவர் களியற்றிய கீர்த்தனங்கள் அடங்கியுள்ளன. (கைவசமில்லை)

விலை ரூ. 2.

தொகுதி 4. தமிழிசைப் பாடல்கள் 60.

முத்துத் தாண்டவர் இயற்றிய கீர்த்தனங்களும், திருப் பாம்புரம் திரு. டி. என். சாமிநாத பிள்ளை அவர்கள் அமைத்த சுரதாளக் குறிப்புக்களும் அடங்கியுள்ளன. (கைவசமில்லை)

விலை ரூ. 2.

தொகுதி 5-ல் முதற்பகுதி. இசையியல்.

இஃது இசைக்கலையின் இலக்கண நுட்பங்களை விளக்கு வது. "சங்கீத கலாநிதி" க. பொன்னையா பிள்ளையவர்களால் எளிய நடையில் தெளிவாக எழுதப் பெற்றது. 750 ரூபாய் பரிசுபெற்ற நூல். இசையாசிரியர்கள், மாணவர்கள், இசைப் பற்றுடையார் யாவர்க்கும் பயன் தருவது.

விலை ரூ. 1—8—0.

தொகுதி 6. தமிழிசைப் பாடல்கள் 90.

நந்தன் சரித்திரம் இயற்றிய கோபாலகிருஷ்ண பாரதி யாரால் பாடப்பெற்ற தனிக் கீர்த்தனங்கள். ஷை பாரதி யாரிடம் நேரிற் பயின்ற மாணவர் பரம்பரையிற் கிடைத்த பழைய இசையமைப்புக்களுடன் கூடியவை. இசையறிஞர் யாவரும் பாடி இன்புறத்தக்க முறையில் அமைந்தவை.

விலை ரூ. 3.

தொகுதி 7. தமிழிசைப் பாடல்கள் 75.

திருவாளர் : எம் பி. பெரியசாமி B. A., L.T., அவாகள இயற்றிய கீர்த்தனங்களும் திரு. என். சிவராம கிருஷ்ண

பாகவதர் அவர்கள் வகுத்த இசையமைப்புக்களும் அடங்கியுள்ளன. (கைவசம் இல்லை) விலை ரூ. 2.

தொகுதி 8. தமிழிசைப் பாடல்கள் 50.

சீகாழி அருணாசலக் கவிராயர் இயற்றிய இராமநாடகக் கீர்த்தனங்கள். இசையரங்குகளிற் பாடுதற்கு ஏற்றவை. பனங்காட்டூர் திரு. சிவராம பாகவதர் அவர்களாற் கிடைத்த பழைய இசையமைப்புக்களுடன் கூடியவை. ஒவ்வொரு பாட்டிற்கும் வரலாற்றுக் குறிப்புக்கள் எழுதப்பட்டுள்ளன.
விலை ரூ. 3.

தொகுதி 9. தமிழிசைப் பாடல்கள் 54.

திருப்பாம்புரம் திரு டி. என். சாமிநாத பிள்ளையவர்களால் இசைவகுக்கப்பட்ட தில்லைவிடங்கன் மாரிமுத்துப் பிள்ளை கீர்த்தனங்கள் 25-ம், செவற்குளம் கந்தசாமிப்புலவர் பாடல்கள் 13-ம், சுரசதி 4-ம், நகரம் முத்துவீரப்பக்கவிராயர் பாடல்கள் 12-ம் அடங்கியுள்ளன. இனிய இசை நயங்கள் உடையவை. விலை ரூ. 3.

தொகுதி 10. தமிழிசைப் பாடல்கள் 66.

நகரம் முத்துசாமிக்கவிராயர் அவர்கள் இயற்றியகீர்த்தனங்கள் 35-ம் பதங்கள் 31-ம் அடங்கியுள்ளன. நகரம் முத்துவீரப்பக் கவிராயர் பாடிக்காட்டிய முறையைத்தழுவிச் சுரதாளக் குறிப்புக்கள் எழுதப்பட்டவை. சிறந்த கருத்துக்களும் உயர்ந்த இசையினிமையும் உடையவை விலை ரூ. 3

தொகுதி 11 தமிழிசைப் பாடல்கள் 75.

திரு. சுத்தானந்த பாரதியாரவர்களால் இயற்றப்பெற்

றவை. திருவாளர்கள் : டைகர் வரதாச்சாரியார், "சங்கீதகலாநிதி" க. பொன்னையா பிள்ளை, இசையரசு எம். எம். தண்டபாணி தேசிகர் முதலிய இசை வல்லுநர்களால் இசையமைப்புக்கள் வகுக்கப்பெற்றவை. விலை ரூ. 3

தொகுதி 12. மிருதங்க பாடப்புத்தகம். (முதற் பகுதி)

மிருதங்க ஆசிரியர் மைலாட்டூர் திரு. வி. சாமிஐயரவர்களால் எழுதப்பெற்றது. முற்காலத்து மிருதங்க வித்துவான்கள் வாசித்த முறைகளையும் இக்காலத்தார் வாசிக்கும் முறைகளையும் தழுவியிருப்பது. மிருதங்கம் பயில்வோர் தெரிய வேண்டிய அளவில் இசையிலக்கணங்களும் குறிக்கப் பெற்றுள்ளன. மாணவர்க்கு மிகவும் பயன்படுவது.

விலை ரூ. 3—8—0.

இன்னும் பல தமிழிசைப்பாடற் றொகுதிகள்
வெளிவரவுள்ளன.

இவை கிடைக்குமிடங்கள்:—

1. ரிஜிஸ்ட்ரார், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர்.
2. தமிழிசைச்சங்கம், 8:9 சிங்கண்ண நாயக்தெரு, ஜி. டி. சென்னை.
3. தமிழ் நாட்டிலுள்ள பல புத்தகசாலைகள்.

ஸ்ரீ முருகன் பிரஸ், சிதம்பரம்.